**கவனிக்க.**–2020.09.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2196 - 2020 ඔක්තෝබර් මස 02 වැනි සිකුරාදා - 2020.10.02

*2196 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | *1308* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1314* |



**கவனிக்க.**– (i) சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயது சட்டமூலம் 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) திருமணப் பதிவு (திருத்தம்) சட்டமூலம் 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1305-B 82063-5,403 (2020/ 10)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

## நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

*நிலைபேறான நகர குடியிருப்பு அபிவிருத்தியொன்று உருவாகுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு தற்போது நடைமுறையிலுள்ள வீடமைப்பு அலகுகளை மேம்படுத்துவதன் ஊடாகவோ அல்லது மிகச் சிறந்த வீடமைப்பு வசதிகள் மற்றும் குறைந்த நகர வசதிகளின் பொருட்டான பிரவேசத்தினை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக சேவை வசதிகள் குறைந்த நகர குடியிருப்புக்களில் வாழ்வோர்களின் வாழ்க்கைத் தரத்தினை கட்டியெழுப்புவது நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முக்கிய குறிக்கோளாகும்.*

இக் குறிக்கோள்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு மனித குடியிருப்பு அபிவிருத்தித் துறையின் தொழில் வான்மையாளர்களின் பங்களிப்புக்கள் தேவை என்பதனால் கீழ்க் குறிப்பிடப்படும் வெற்றிடமாகவுள்ள பதவிகளின் பொருட்டு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | சம்பளத் தொகுதி |
|---|---|
| உதவிப் பணிப்பாளர் (சமூகவலுவூட்டல்) | MM 1-1 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | JM 1-1 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | MA 5-1 |
| தரவுத் திட்ட உதவியாளர் | MA 5-1 |
| சமுதாய அபிவிருத்தி உதவியாளர் | MA 3 |
| தொழில்நுட்ப உதவியாளர் | MA 2-1 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) | MA 1-1 |
| சமூக அபிவிருத்தி உதவியாளர் | MA 1-1 |
| அலுவலக பணி உதவியாளர் | PL 1 |
| சுவடிகள் பொறுப்பாளர் | PL 1 |

**ஆட்சேர்த்துக் கொள்வதற்கான பொதுவான நிபந்தனைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் :

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) பணியில் ஒப்படைக்கப்படுகின்ற பணிகளை சிறப்பாக நிறைவேற்றும் பொருட்டும் நாட்டின் எந்த ஒரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளரீதியான பொருத்தப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) சிறந்த நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

### 01. உதவிப் பணிப்பாளர் (சமூகவலுவூட்டல்)

**கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சமூகவியலை ஒரு பாடமாக உள்ளடக்கிய முதலாவது பட்டம்.

மற்றும்

(ஆ) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரசாங்க அல்லது அரச நிர்வாகத்தின் கீழ் உள்ள நிறுவனம் ஒன்றிலோ அல்லது அரசாங்கம் அங்கீகரித்த தனியார் நிறுவனம் ஒன்றில் சமூகவலுவூட்டல் தொடர்பான அல்லது அதற்குச் சமனான துறையொன்றில் ஆகக்குறைந்தது 03 வருட சேவை அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

**ஏனையவை**.- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் (இலங்கை சமூகசேவைக் கல்லூரி) தொழில்சார் சமூகப் பணிதொடர்பான இரு வருட முழு நேர டிப்ளோமாவைப் பெற்றிருப்பது மேலதிக தகைமையொன்றாகக் கருதப்படும்.

**வயது**.- 25 வயதிலும் குறையாத 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவசேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம் | ரூபா 53,175 - 10 × 1,375 - 15 ×1,910 - 95,575 |
| 2020.01.01 ஆந் திகதியில் சம்பள அளவு | ரூபா 53,175.00 |
| கொடுப்பனவுகள் | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவும், பதவிக்குச் சொந்தமான பிற கொடுப்பனவுகளும் |

02. **தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

**கல்வித் தகைமைகள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சிவில் பொறியியல்/அளவியல் ஆய்வு கட்டிடக்கலை உள்ளடங்கியதாக பெற்றுக்கொண்ட விஞ்ஞானமானிப் பட்டம்

மற்றும்

(ஆ) அரசாங்க அல்லது அரச நிர்வாகத்தின் கீழ் உள்ள நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கம் அங்கீகரித்த தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில்நுட்ப நடவடிக்கைகள் தொடர்பில் ஆகக்குறைந்தது 01 வருட சேவை அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

**வயது**.- 25 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம் | ரூபா 42,600 - 10×755 -18 ×1,135–70,580 |
| 2020.01.01 ஆந் திகதியில் சம்பள அளவு | ரூபா 42,600.00 |
| கொடுப்பனவுகள் | வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு |

03. **அபிவிருத்தி உத்தியோகத்தர்**

**கல்வித் தகைமைகள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூகவியல் அல்லது விவசாய விடயமும் உள்ளடங்கியதாக பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம்

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரித்த பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பட்டத்துடன் தொழில்சார் சமூகப் பணி தொடர்பான முழுநேர இரு வருட டிப்ளோமா பாடநெறியோ அல்லது விவசாயம் தொடர்பில் பெற்றுக்கொண்ட டிப்ளோமா சான்றிதழ்

**வயது**.- 22 வயதிற்கு குறையாத 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம் | ரூபா 34,870 - 10 ×660 - 15 × 755– 11 × 930 – 63,025 |
| 2020.01.01 ஆந் திகதியில் சம்பள அளவு | ரூபா 34,870.00 |
| கொடுப்பனவுகள் | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு |

04. **தரவுத்திட்ட உதவியாளர்**

**கல்வித் தகைமைகள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம், புள்ளிவிபரவியல்/ தகவல் தொழில்நுட்பம்/ கணினி மற்றும் முகாமைத்துவம் மற்றும் நகர மற்றும் கிராமிய நிர்மாண விடயம் உள்ளடங்கியதாக பெற்றுக்கொண்ட பட்டம்.

**வயது** : 22 வயதிற்கு குறையாத 35 வயதிற்குமேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம் | ரூபா 34,870 - 10 × 660 - 15 × 755– 11 × 930 – 63,025 |
| 2020.01.01 ஆந் திகதியில் சம்பளஅளவு | ரூபா34,870.00 |
| கொடுப்பனவுகள் | வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு |

05. **சமுதாய அபிவிருத்தி உதவியாளர்**

**கல்வித் தகைமைகள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் ஒரு பட்டம்.

**பிற தகுதிகள்**

தொழில்சார் சமூகப்பணி தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறி அல்லது அரசாங்கம் அங்கீகரித்த நிறுவனம் ஒன்றின் விவசாயம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ்/சமூகவியல் தொடர்பான டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்

**வயது** : 22 வயதிற்கு குறையாத 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம் | ரூபா 32,200 - 10 × 445 - 11× 660– 10 × 730 – 5 × 750 - 63,025 |
| 2020.01.01 ஆந் திகதியில் சம்பள அளவு | ரூபா 32,200.00 |
| கொடுப்பனவுகள் | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு |

06. **தொழில்நுட்ப உதவியாளர்**

**கல்வித் தகைமைகள்**

(அ) மொழி அல்லது இலக்கியம் கணிதம் மற்றும் விஞ்ஞானம் உள்ளடங்கலாக 06 பாடங்களில் கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

**தொழில்சார் தகைமைகள் :**

(அ) இரண்டாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரகாரம் தேசிய கல்வியியல் சார் திறமைச் சான்றிதழ் (NVQ) 05 ஆவது மட்டத்தில் குறையாதபடி நிலையினைக்கொண்டிருத்தல் வேண்டும்.

(i) தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா சான்றிதழ் (சிவில் பொறியியல்)

அல்லது

(ii) உயர் தேசிய டிப்ளோமா (பொறியியல்) சான்றிதழைக் கொண்டிருத்தல்

மற்றும்

(iii) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (பொறியியல்/ அளவியல்) அல்லது அதற்குச் சமனான அரசாங்கத்தினால் அங்கீகரித்த தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றின் சிவில் பொறியியல் சான்றிதழ்/அளவியல் ஆய்வு சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயது**: 18 வயதிற்கு குறையாத 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம் | ரூபா 30,310 - 10 × 300 - 7× 350– 4 × 495 – 20 × 660 – 50,940 |
| 2019.01.01 ஆந் திகதியில் சம்பளஅளவு | ரூபா 30,310.00 |
| கொடுப்பனவுகள் | வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு |

07. **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத)**

**கல்வித் தகைமைகள் :**

(அ) கல்விப்பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் திறமைச் சித்தி

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் 03 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் (பொது அறிவு தவிர்ந்த)

**ஏனையவை**

(ஆ) AAT இடைநிலை பரீட்சையில் தேறியிருத்தல்

(ஆ) பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற ஆரம்ப மட்டம் தொடர்பான சான்றிதழைப் பெற்றிருத்தல்

(இ) பட்டயக் கணக்காளர் மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற ஆரம்ப மட்டம் தொடர்பான சான்றிதழைப் பெற்றிருத்தல்

(ஈ) அரசாங்க மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கணினி டிப்ளோமா சான்றிதழைக் கொண்டிருத்தல்.

(உ) அரசாங்க அல்லது அரசாங்கம் அங்கீகரித்த நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட செயலாளர் பதவி தொடர்பான சான்றிதழைப் பெற்றிருத்தல்

**வயது** : 18 வயதிற்கு குறையாத 30 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவசேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம் | ரூபா 27,910 - 10 × 300 - 7× 350– 4× 495 – 20 × 660 – 48,540 |
| 2020.01.01 ஆந் திகதியில் சம்பள அளவு | ரூபா 27,910.00 |
| கொடுப்பனவுகள் | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு |

08. **சமூக அபிவிருத்தி உதவியாளர்**

**கல்வித் தகைமைகள் :**

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத சிங்களம்/தமிழ் மொழி கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட்டதாக 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் தேறியிருத்தல்

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் பழைய பாடத்திட்டத்திற்கமைய நான்கு பாடங்களில் (04) அல்லது புதிய பாடத்திற்கமைய மூன்று பாடங்களில் (03) (பொது அறிவு தவிர்ந்த) ஒரே அமர்வில் தேறியிருத்தல்

மற்றும்

(ஆ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்சார் சமூகப்பணி தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியில் தேறியிருத்தல்

**வயது**: 18 வயதிற்கு குறையாத 30 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம் | ரூபா 27,910 - 10× 300 - 4 × 495– 20 ×660 – 48,540 |
| 2020.01.01 ஆந் திகதியில் சம்பள அளவு | ரூபா27,910.00 |
| கொடுப்பனவுகள் | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு |

09. **அலுவலக பணி உதவியாளர்**

10. **சுவடிகள் பொறுப்பாளர்**

**கல்வித் தகைமைகள்**

(அ) கல்வி பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு பாடங்களிலாவது திறமைச் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**வயது** : 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(இப் பதவியின் பொருட்டு 2020.01.08 ஆந் திகதியின் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள பல்பணி அபிவிருத்தி செயற்திறன் அணிக்காக தெரிவுசெய்யப்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.)

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம் | ரூபா 24,750 - 10× 250 - 10× 270– 7 × 300 – 15 × 330 – 37,000 |
| 2020.01.01 ஆந் திகதியில் சம்பள அளவு | ரூபா 24,750.00 |
| கொடுப்பனவுகள் | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு |

தகுதியானவர்களை தெரிவு செய்வது தொடர்பான இறுதித் தீர்மானம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரியதாகும். தற்போது அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியாயாதிக்க சபைகள், மற்றும் திணைக்களங்களில் பணியாற்றுவோருக்கு வயதெல்லை பாதிப்பினை ஏற்படுத்தாது என்பதுடன் அவர்கள் நிறுவனத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

சகல சுய விபரத் தரவுத் தகவல்கள் உள்ளடங்கிய விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் உறவினரல்லாத இருவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்களுடன் கீழுள்ள முகவரிக்கு 2020.10.16 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்கின்ற பதவியினை கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்.

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை
09 ஆவது மாடி
செத்சிறிபாய, பத்தரமுல்லை
தொலைபேசி 011-288772 தொலைநகல் 011-2871305
மின்னஞ்சல் - dg.usda16@gmail.com

10-219

## நீதிச்சேவை ஆணைக்குழு

### இலங்கை நீதிச் சேவையில் நிலவும் வெற்றிடங்கள்

இலங்கை நீதிச்சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்குரிய (நீதிவான்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்கள், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 06.11.2020 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 75,000-10×1,630- ரூபா 91,300 (இச்சம்பளத் திட்டமானது முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/ 2018 இக்கு அமைவாக திருத்தப்படும்.) சம்பளத்திற்கு மேலதிகமாக நீதிமன்ற அதிகாரிகளுக்குரிய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

03. **சகல விண்ணப்பதாரிகளும்**.-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) நன்னடத்தையும் தேக ஆரோக்கியமும் உடைய வராக இருத்தல் வேண்டும்;

(இ) இலங்கையின் அனைத்து பாகங்களிலும் சேவை யாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. **தகைமைகள்**.-

(அ) விண்ணப்பங்களிற்கான முடிவுத் திகதியன்று தொழில் நியாய சபையின் தலைவராக இரண்டு வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தை கொண்டிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ஆ) விண்ணப்பங்களிற்கான முடிவுத் திகதி யன்று நான்கு வருடங்களுக்கு குறையாமல் செயற்றிறன் மிக்கவாறு வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்;

அல்லது

(இ) விண்ணப்பங்களிற்கான முடிவுத் திகதி யன்று ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரசாங்க திணைக்களம் ஒன்றில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக நான்கு வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தைக் கொண்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்;

அல்லது

(ஈ) விண்ணப்பங்களிற்கான முடிவுத் திகதி யன்று ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக நான்கு வருடங்களுக்கு குறை யாத சேவைக்காலத்தை கொண்டவராகவும், அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதி மன்றத்தில் தோன்றிய வழக்கறிஞராகவும் இருத்தல் வேண்டும்.

05. சகல விண்ணப்பதாரிகளும் எழுத்துப் பரீட்சைக்கு தோற்ற வேண்டியதுடன் அதன் பெறுபேறுகளின் அடிப் படையில் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

**குறிப்பு**.- (1) விண்ணப்பப்படிவக் கட்டணமான 4,000 ரூபா வினை மக்கள் வங்கியின் டாம் வீதிக் கிளையில் பேணப்பட்டு வரும் 297100199025039 என்ற இலக்கத்தை உடைய "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு" எனும் கணக்கில் இடும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட வைப்புச்சீட்டினை பதிவுத் தபாலினூடாகவோ அல்லது நேரில் அலுவலகத்திற்கு வந்து சமர்ப்பிப்பதன் மூலமாகவோ விண்ணப் பப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். பணம் செலுத்துவதற்காக வைப்புச் சீட்டினை நிரப்பும் போது வைப்புச்சீட்டின் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி என்ப வற்றை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரிகள் பதிவுத்தபாலினுடாகவோ அல்லது நீதிச் சேவை ஆணைக்குழு செயல கத்திற்கு நேரில் சமுகமளித்தோ தமது விண்ணப் பப்படிவங்களை சமர்ப்பிக்கலாம்.

(3) பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண் ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்வதற்கும் சமர்ப் பிப்பதற்குமான முகவரி :

செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு,
நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12.

எச். சஞ்ஜீவ சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2020, செத்தெம்பர் 22.

10-264

## நீதிச்சேவை ஆணைக்குழு

### நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபைக்கான தலைவர் பதவி

01. நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையில் நிலவும் தலைவர் பதவி வெற்றிடத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதிவாய்ந்த நபர்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தினை வந்தடையுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. **தகைமைகள்.-**

(அ) விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் பகிரங்க அலுவலரொருவராக இருபது ஆண்டுகளுக்கு மேலான அனுபவத்தை கொண்டிருத்தல் ;

அல்லது

(ஆ) விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் சட்ட உயர் தொழிலில் பத்தாண்டுகளுக்கு மேலான அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்;

03. தலைவருக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள் கீழ்வருமாறு :

மாதாந்த கொடுப்பனவு - ரூபா 100,000.00

பிரயாணக் கொடுப்பனவு - ரூபா 50,000 (மாதாந்தம்)

எரிபொருள் கொடுப்பனவு - 225 லீற்றர் (மாதாந்தம்) (சந்தை விலைக்கு ஏற்ப)

தொலைபேசி கொடுப்பனவு - ரூபா 10,000.00 (மாதாந்தம்)

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2020, செத்தெம்பர் 23.

10-399

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை -2018 (II) மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 (I)

1. இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2018 (II) மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல்

பரீட்சை - 2019 (I) ஆனது அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கண்காணிப்பு மற்றும் வழிநடாத்தல் என்பவற்றின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தினால் 2020.10.24 ஆந் திகதி முதல் 2020.11.08 ஆந் திகதி வரை வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. மேற்படி சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைபெறும் :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீடு |
|---|---|---|
| 1. | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLAS 1 |
| 2. | இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLES |
| 3. | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLSS |
| 4. | இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLArS |
| 5. | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLAcS 1 |
| 6. | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLPS 1 |
| 7. | மேற்குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமான ஏனைய சேவைகள் | Other |
| 8. | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLAS 2 |
| 9. | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLAcS 2 |
| 10. | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLPS 2 |

3. அலுவலர் தாம் விரும்பிய ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாக மற்றும் ஒன்றுக்கொன்று முரணான தடவைகளில் தோற்றலாம். ஆயினும், விதித்துள்ள காலப்பகுதியினுள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் அவசியமாகும்.

4. இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இச்சட்டதிட்டத்தினை மீறும் சந்தர்ப்பத்தில் ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இணையத்தின் ஊடாக நிகழ்நிலை முறையில் (Online) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இனுள் பிரவேசிப்பதன் மூலம் மட்டுமே நிகழ்த்த முடியும். இணையத்தளத்தின் பிரதான முகப்பக்கத்தில் வலது பக்கமுள்ள பட்டியலில் "Examination" என்னும் நீட்சியின் ஊடாக "பரீட்சைப் பிரிவுக்கு (Examination Division)" பிரவேசித்து தமக்குரிய பரீட்சையினைத் தெரிவு செய்வதன் மூலம் விண்ணப்பப்பத்திரத்தினை நிரப்பிக்கொள்ள முடியும்.

பரீட்சை விண்ணப்பப்பத்திரத்தினை நிரப்புவதற்கு 2020.10.02 ஆந் திகதி மு. ப. 8.00 மணி தொடக்கம் 2020.10.16 ஆந் திகதி இரவு 12.00 மணி வரையான காலப்பகுதியினுள் மட்டுமே பூரணப்படுத்த முடியும்.

6. **பரீட்சைக் கட்டணங்கள்.**- முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் எந்தவித பரீட்சைக் கட்டணங்களையும் செலுத்த வேண்டியதில்லை. இதற்கு முன்னர் பரீட்சார்த்தி ஒருவர் விண்ணப்பத்தினை மேற்கொண்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அனுமதி ஒன்று வழங்கிய பின்னருங்கூட அப்பரீட்சைக்குத் தோற்றியிராத அத்தகைய நிலைமைகளில் அதனைப் பரீட்சைக்குத் தோற்றியதாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றிய அலுவலர்கள் பின்வரும் விதத்தில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

இலங்கை நிர்வாக சேவையின், இலங்கைக் கணக்காளர் சேவையின் மற்றும் இலங்கை திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ஒரு பரீட்சை என்றும், இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இன்னொரு பரீட்சை என்றும் கருதி பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500.00 ரூபாவினை பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000.00 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000.00 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500.00 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.

இலங்கை பொறியியல் சேவையின், இலங்கை விஞ்ஞான சேவையின் மற்றும் இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்தினை விட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் ரூபா 1,000.00 இனை பரீட்சைக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூபா 500.00 இனை பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணத்தை இலங்கை நாடு முழுவதிலுமுள்ள ஏதேனுமொரு அஞ்சல் அலுவலகத்தின் மூலம் (உப அஞ்சல் அலுவலகங்கள் நீங்கலாக) "SLIDA" கணக்கிற்கு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம் விண்ணப்பத்தின் உரிய கூட்டில் குறிப்பிடப்படல் வேண்டும். "SLIDA" கணக்கிற்கு பணத்தினைச் செலுத்துவதற்காக உள்நாட்டுத் தந்திக் காசுக் கட்டளை விண்ணப்பத்தினை (மாதிரி 85) நிரப்பும்போது "SLIDA" என்பது பெறுநராகக் குறிப்பிடப்பட வேண்டும். அதேவேளை உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரானது பெறுநரின் முகவரிக்கான இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். (பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டவாறு குறியீட்டுப் பெயர்கள் அமைதல் வேண்டும்.)

மேலும் கணக்கிற்கு பணத்தினை வரவு வைக்கும்போது அனுப்புபவராக விண்ணப்பதாரியின் பெயரினையும் அனுப்புபவரின் முகவரிக்கான இடத்தில் விண்ணப்பதாரியின் தே. அ. அ. (NIC) இலக்கத்தையும் உள்ளடக்கி விண்ணப்பமானது நிரப்பப்படுதல் வேண்டும்.

07. இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான பரீட்சை மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

இணையத்தில் நிகழ்நிலையில் (Online) நிரப்பப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும்போது பரீட்சார்த்திகளுக்கு உறுதிப்படுத்தல் இலக்கம் (Confirmation Number) ஒன்று வழங்கப்படும் என்பதுடன் பரீட்சார்த்தி பின்னர் எழும் விசாரணைகளுக்காக அதனை வைத்திருத்தல் வேண்டும். உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமானது இணையத்தின் நிகழ்நிலை முறையினூடாக (Online) அனுப்பப்பட்டவுடன் பரீட்சார்த்திகள் அணுகுவழியினைக் கொண்டிருக்கும் இணையப் பக்கத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் அவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையின் அச்சிடப்பட்ட பிரதி ஒன்றினைப் பெறல் வேண்டும் என்பதுடன் உரிய திணைக்களத் தலைவரினால் அல்லது அந்த நோக்கத்திற்காக தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதி அலுவலரினால் தனது கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்விதத்தில் சான்றுறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திய அனுமதி அட்டையின் பிரதியொன்றைப் பரீட்சார்த்தியின் பிரத்தியேகக் கோவையில் இணைத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக திணைக்களத் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- இணையத்தின் நிகழ்நிலையினூடாக (Online) விண்ணப்பத்தினை நிரப்பும்போது தனிப்பட்ட முகவரி, பணியாற்றும் நிறுவனம் மற்றும் அலுவலக முகவரி என்பன தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும்.

8. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான செய்முறை தொடர்பிலான ஏதேனும் தெளிவூட்டல் தேவைப்படின் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு 2020.10.02 ஆந் திகதி முதல் 2020.10.16 ஆந் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 மணியிலிருந்து பி. ப. 4.30 மணி வரை இந்த இணைப்பின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்ளப்பட முடியும்.

9. அனுமதி அட்டைகளைக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக கடமை விடுமுறையினைத் திணைக்களத் தலைவர் வழங்குதல் வேண்டும். அவர்களின் பரீட்சார்த்தித் தன்மையினை உறுதிப்படுத்த வேண்டுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இதனைச் செய்துகொள்ள முடியும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகளுக்கு போக்குவரத்துச் செலவினங்கள் வழங்கப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் முன்வைத்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்தியொருவர் தனக்கு உரித்துடையதற்ற மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக தெரியவருமாயின் அத்தகைய விண்ணப்பதாரியின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பரீட்சார்த்தி அனுமதிக்கப்படமாட்டார்.

12. **பரீட்சை நடைமுறை**.- ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள் கீழே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாத்தாளுக்குமான காலப்பகுதி மூன்று (3) மணித்தியாலங்களாகும். வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்துவதற்குப் பரீட்சார்த்தி ஒருவர் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் :-

12.1 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (2013.12.23 ஆந் திகதிய 1842/ 2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் “எ” வின் இணைப்பு).

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கை நிர்வாக சேவை அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | சட்டம் | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01-I |
| | | இலங்கையின் சட்டமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 01-II |
| | | குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01-III |
| 02 | நிர்வாகம் | | 3 மணித்தியாலங்கள் | 02-I |
| 03 | பொருளியல் மற்றும் சமூகவியல் | | 3 மணித்தியாலங்கள் | 03 |
| 04 | அரச துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு வழங்கல் செயற்பாடும் | | 3 மணித்தியாலங்கள் | 04 |

12.1.1 ***சட்டம் :***

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட மூன்று வினாப் பத்திரங்கள் :

*முதலாவது (I) வினாப்பத்திரம்.- அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் (பாட இலக்கம் 01-I) - (100 புள்ளிகள்) :*

(i) வரலாற்று ரீதியிலான அபிவிருத்தி உள்ளிட்ட இலங்கை அரசியலமைப்பின் கட்டமைப்பு மற்றும் 1978 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு.
(ii) நிறைவேற்றுத்துறை, குடியரசின் சனாதிபதி, பிரதம அமைச்சர், அமைச்சரவை மற்றும் அரசாங்க சேவை.
(iii) நீதி நிர்வாகம்.
(iv) நிர்வாகத்துடன் தொடர்பான நீதித்துறைக் கட்டுப்பாடு.
(v) அரசாங்க கொள்கைகளுக்கான வழிகாட்டிக் கொள்கைகளும் அடிப்படைக் கடமைகளும்.
(vi) கையளியதிகார வழிச்சட்டம்.
(vii) அரசாங்கத்தினதும் அரச அதிகார சபைகளினதும் பொறுப்புக்கள்.
(viii) அடிப்படை உரிமைகள்.

*இரண்டாவது (II) வினாப்பத்திரம்.- இலங்கையில் சட்ட முறைகள் (பாட இலக்கம் 01-II) - (100 புள்ளிகள்) :*

(i) நீதி நிர்வாகம்
(ii) இலங்கையின் சட்ட வரலாறு
(iii) நீதிமன்ற அமைப்பு
(iv) இலங்கை நீதிமன்ற கட்டளைச் சட்டம் (6 ஆவது அத்தியாயம்)
(v) 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிர்வாகச் சட்டம்

*மூன்றாவது (III) **வினாப்பத்திரம்**.- குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் (பாட இலக்கம் 01-III) - (100 புள்ளிகள்) :*

(i) தண்டனைச் சட்டக்கோவை
(ii) சான்றுக் கட்டளைச் சட்டம்
பரீட்சார்த்தி ஒருவர் சட்டம் என்ற பாடத்தினைச் சித்தியெய்துவதற்கு சகல வினாப்பத்திரங்களிலும் ஆகக்குறைந்தது 35 புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகளில் சராசரியாக 40% இனையும் பெறுதல் வேண்டும்.

12.1.2 ***நிர்வாகம் (பாட இலக்கம் 02 - I) - (100 புள்ளிகள்).-***

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :

(i) அலுவலக, வெளிக்கள பணிகளை ஏற்பாடு செய்தலும் அமைப்பாண்மை முறைகளும்.
(ii) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் :
I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்.

12.1.3 ***பொருளியல் மற்றும் சமூகவியல் (பாட இலக்கம் - 03) - (100 புள்ளிகள்).-***

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கும்.

முதலாவது (I) பகுதி வினாப்பத்திரம் - பொருளியல்

(i) பெறுமானம், உற்பத்தி மற்றும் விநியோக கொள்கைகளின்பால் விசேட கவனம் செலுத்திய பொருளாதாரக் கோட்பாடுகள் ;
(ii) நிதி, உற்பத்தி மற்றும் விநியோகம் ;
(iii) இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு தொடர்பான அவதானம் மற்றும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணி மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

இரண்டாவது (II) பகுதி - சமூகவியல் :

(i) சமூகக் கட்டமைப்பின் அமைப்பாண்மையும் பணிகளும்
(ii) மானிட உறவுகளும் தொகுமங்களும்
(iii) உறவு முறை, திருமணம் மற்றும் குடும்பம்
(iv) கிராமிய மற்றும் நகர்ப்புறச் சமூகம்
(v) சமூக நிலைகளும் ஏற்றத்தாழ்வுகளும்
(vi) சமூகக் கட்டுப்பாடு
(vii) கலாச்சாரம், சமயம், ஒழுக்கம் மற்றும் விழுமியங்கள்

பொருளியல் மற்றும் சமூகவியல் பாடத்தினைச் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக்குறைந்தது இருபது (20) புள்ளிகளைப் பரீட்சார்த்தி ஒருவர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

12.1.4 ***அரச துறை நிதி முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு வழங்கல் செயற்பாடும் - (பாட இலக்கம் - 04) - (100 புள்ளிகள்).-***

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) இலங்கையில் நிதிக் கட்டுப்பாடு-

* அரசாங்க நிதி முகாமைத்துவத்திற்கு ஏற்புடைய அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகள் ;
* அரசாங்க நிதி குறித்த பாராளுமன்றக் கட்டுப்பாடு ;
* நிதியம் என்பதன் கருத்து ;
* திரட்டிய நிதியமும் அதன் செயற்பாடும் ;
* ஒதுக்கீட்டின் நோக்கங்களும் ஒதுக்கீட்டு முறைமைகளும் ;
* எதிர்பாரா நிகழ்வுகளுக்கான நிதியம் ;
* பிற நிதிகளும் அவற்றின் தொழிற்பாடுகளும் ;
* அரசாங்க வருமானம் ;
* நிதி அமைச்சரின் அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும் ;
* திறைசேரியின் அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும் ;
* ஆணைச்சீட்டுக்கள் மற்றும் கட்டுநிதி அதிகாரம் ;
* கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரின் அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும்;
* அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (COPA) ;
* அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு (COPE).

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், பிரதம கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானக் கணக்கீட்டு அலுவலர்களின் நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் கடமைப் பொறுப்புக்கள்/ வகைகூறல் மற்றும் பொறுப்புக்கூறலின் தன்மை.
(iii) உள்ளகக் கணக்காய்வு
(iv) அரசாங்க செலவுகளைத் திட்டமிடலும் முகாமைத்துவம் செய்தலும்-

* அமைப்புக்களின் நோக்கங்களையும் கடமைப் பொறுப்புக்களையும் இனங்காணல்
* அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், குறி இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல்
* அபிவிருத்திக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதலும் மதிப்பீட்டு முன்னுரிமை வழங்கலும்
* ஆண்டு வருவாய் மற்றும் செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இறுதி முடிவெடுத்தலும்

(v) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்களைச் செய்தல்-

* வீரமொங் நடவடிக்கை முறையைச் செயற்படுத்துதல்
* அரச துறையின் பதவியணிகள் மற்றும் சம்பள முகாமைத்துவம்
* மொத்தக் கிரய மதிப்பீடுகளும் அவற்றை மீளமைத்தலும்
* குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் கைவிடல்களும்

(vii) பல்வேறு கணக்குச் செலவுகள்

(viii) நிதி முகாமைக்கான பணிகளைப் பொறுப்பளித்தல்

(ix) அரச நிதியின் பொறுப்பும் வங்கிக் கணக்கு நடைமுறையும்

(x) அரசாங்க கொள்வனவு - வழங்கல் நடைமுறை

* அரசாங்கக் கொள்வனவு - வழங்கல் பணிக்கோவை

* அரசாங்க கொள்வனவு - வழங்கல் வழிகாட்டல் கோவை

12.2 இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (2013.11.11 ஆந் திகதிய 1836/ 6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைப் பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை "iii")

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழ்வருமாறு :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 01 | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-II |
| 02 | நிதி முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 05-I |
| 03 | திணைக்கள/ தாபன முறைமைகள் | இப்பரீட்சை நிறுவனத் தலைவரினால் நடாத்தப் படுவதனால் இது குறித்த விபரங்கள் இவ் வறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. | |

ஒவ்வொரு பாடத்தினையும் சித்தியெய்துவதற்கு குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.2.1 ***நிர்வாகம் - (பாட இலக்கம் 02-II) - (100 புள்ளிகள்).*** - 1985 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் தொகுதி I மற்றும் 1999 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் தொகுதி II இலுள்ள சகல அத்தியாயங்களும் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் (உரிய காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு) என்பவற்றின் அடிப்படையில் பொறியியல் சேவைத் தொழிற்பாடுகள் தொடர்பில் தயாரிக்கப்படும் ஒரு வினாப்பத்திரம்.

12.2.2 ***நிதி முறைகள் - (பாட இலக்கம் 05-I) - (100 புள்ளிகள்).*** - அத்தியாயம் IX மற்றும் X தவிர 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நிதிப் பிரமாணங்களிலுள்ள சகல அத்தியாயங்களும் மற்றும் தேசிய பெறுகை வழிகாட்டலுக்கான தகுதி விதிகள் (உரிய காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு) என்பவற்றின் அடிப்படையில் பொறியியல் சேவைத் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் தயாரிக்கப்படும் ஒரு வினாப்பத்திரம்.

12.3 இலங்கை விஞ்ஞான சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (2014.08.28 ஆந் திகதிய 1877/ 27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 4) மற்றும்

இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (2014.08.28 ஆந் திகதிய 1877/ 28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 4).

இப்பரீட்சைகளுக்கான பாடங்கள் பின்வருமாறு காணப்படுகின்றது :

| *பாடம்* | *காலம்* | *பாட இலக்கம்* |
|---|---|---|
| நிதி முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 05-II |
| நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-III |
| திணைக்கள ஒழுங்குவிதிகள் | இப்பரீட்சை நிறுவனத் தலைவரினால் நடாத்தப்படுவதனால் இது குறித்த விபரங்கள் இவ்வறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. | |

12.3.1 ***நிதி முறைமைகள்.- (பாட இலக்கம் 05-II) - (100 புள்ளிகள்).-***

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) இலங்கையில் நிதிக் கட்டுப்பாடு-

* அரச நிதி முகாமைத்துவம் தொடர்புபட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகள்
* அரச நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு
* நிதியம் என்பதன் கருத்து
* திரட்டு நிதியமும் அதன் தொழிற்பாடும்
* ஒதுக்கீட்டின் குறிக்கோளும் முறைகளும்
* எதிர்பாராச் செலவு நிதியம்
* ஏனைய நிதியங்களும் அவற்றின் தொழிற்பாடும்
* அரசிறை
* நிதி அமைச்சரின் அதிகாரங்களும் வகிபங்குகளும்
* திறைசேரியின் அதிகாரங்களும், வகிபங்குகளும்
* ஆணைச்சீட்டுக்கள் மற்றும் கட்டுநிதி அதிகாரம்
* கணக்காய்வாளர் நாயகமும் அவரின் அதிகாரங்களும் வகிபங்குகளும்
* அரச கணக்குக் குழு (COPA)
* அரச தொழில் முயற்சிக்குழு (COPE)

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானக் கணக்கீட்டு அலுவலர்களின் நியமனங்கள், அவ் அலுவலர்களின் அதிகாரங்கள் மற்றும் வகிபங்குகள்/ பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தன்மை.

(iii) உள்ளகக் கணக்காய்வு

(iv) அரசாங்க செலவினங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்-

* அமைப்புக்களின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளை இனங்காணல்
* அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல்
* அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதலும் மதிப்பிடுதலும் மற்றும் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தலும்
* வருடாந்த வருமானம் மற்றும் செலவுகளின் மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதித் தீர்மானம் எடுத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்களை மேற்கொள்ளல்-

* வீரமொங் நடைமுறையினை அமுல்படுத்துதல்
* அரச துறையின் பதவியணி மற்றும் சம்பள முகாமைத்துவம்
* மொத்தச் செலவு மதிப்பீடுகளும் திருத்தங்களும்
* குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் உரிமைக் கைவிடல்களும்

(vii) நானாவித கணக்கீட்டு விடயங்கள்

(viii) நிதி முகாமைத்துவத்திற்கான தொழிற்பாடுகளைக் கையளித்தல்

(ix) அரச நிதியின் கட்டுக்காப்பும் வங்கிக் கணக்குகளின் நடைமுறையும்
(x) அரசாங்கப் பெறுகைச் செயன்முறை-

* அரசாங்கப் பெறுகை நடைமுறைக் கோவை
* அரசாங்கப் பெறுகை வழிகாட்டல்கள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.3.2 ***நிர்வாகம்.- (பாட இலக்கம் 02-III) - (100 புள்ளிகள்).-***

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள்-

I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII,

(ii) 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.4 இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 3 ஆவது பின்னிணைப்பு)

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 01 | அரசாங்க நிதி நடைமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 06 |
| 02 | சட்டமும் முகாமையும் | 3 மணித்தியாலங்கள் | 07 |
| 03 | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-IV |
| 04 | அறிக்கை எழுதுதலும் முகாமைக்குத் தகவல் வழங்குதலும் | 3 மணித்தியாலங்கள் | 08 |

12.4.1 ***அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் (பாட இலக்கம் - 06) - (100 புள்ளிகள்).-***

நிதி ஒழுங்குவிதிகளின் பிரயோகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், திறைசேரியின் சுற்றறிக்கைகள், வருமானம், செலவினம், வெளிநாட்டு உதவி, வருடாந்த மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு, அரச படுகடன் வழங்கல், கேள்விப்பத்திரங்கள், கட்டுநிதிகள் மற்றும் முற்பணங்கள், நாட்டின் கணக்கு, தொழிற்பாட்டு மற்றும் பொருளாதார வகுப்பாக்கங்கள், வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டமும் செயலாற்றுகையும், நிதி அமைச்சரின் பணிகள், பொதுத் திறைசேரி, நிதி அமைச்சு, செயலாளர்கள், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அரச கணக்குகள் குழு தொடர்பான அரச நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரியின் சுற்றறிக்கை பயன்படுத்தப்படும் முறைமை தொடர்பாகவும் பரீட்சார்த்திகள் பரிசோதிக்கப்படுவர்.

12.4.2 ***சட்டமும் முகாமைத்துவமும் (பாட இலக்கம் - 07 - 100 புள்ளிகள்)***

***சட்டம்*** : சட்டத்தின் வரைவிலக்கணம் -

இலங்கையின் சட்ட முறைமைகள்
இலங்கையின் நீதிமன்ற முறைமைகள்
ஒப்பந்தச் சட்டம்
முகவராண்மைச் சட்டம்

பொருட்களின் விற்பனை
வாடகைக் கொள்வனவு
பேரம் பேச்சுவார்த்தை சாதனங்கள்
பிணையங்களின் உத்தரவாதம்
காப்புறுதி

**முகாமைத்துவம் :**

முகாமைக்கான அறிமுகம்
முகாமையாளர்களினது பணிகளும் தேர்ச்சிகளும்
திட்டமிடல் செய்முறையும் மற்றும் அமைப்பு நிலைகளை உருவாக்கல்
அமைப்புக் கட்டமைப்பு
மனித வள முகாமைத்துவம்
செயலாற்றுகை மதிப்பீடு
ஊக்குவிப்பு
உள்நோக்கம்
தலைமைத்துவம்
தொடர்பாடல்
தீர்மானம் எடுத்தல்
பிரச்சினைகளைத் தீர்த்தல்
மாறுபட்ட முகாமைத்துவம்
முகாமைத்துவ முரண்பாடுகள்
முகாமைத்துவக் காலம்
தரச் சுழற்சி, உற்பத்தி மற்றும் விளைவு
முகாமைத்துவ நெறிமுறைகள் மற்றும் பொறுப்புக்கள்

12.4.3 ***நிர்வாகம் (பாட இலக்கம் 02-IV) - (100 புள்ளிகள்) :***

தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் :

VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

மற்றும்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியின் முதலாவது வகுதியின் I தொடக்கம் VI வரையான அத்தியாயங்கள்

12.4.4 ***அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்களை முன்வைத்தல் (பாட இலக்கம் - 08) (100 புள்ளிகள்) :***

முகாமைத்துவ தகவல்கள் தொடர்பாக காலத்திற்கேற்ற வகையில் உண்மைத் தன்மை மற்றும் முழுமைத்தன்மையின் முக்கியத்துவம்
கணினிப் பயன்பாட்டின் உதவி
காலாந்தர நிமித்த காரண அறிக்கை
கூட்ட அறிக்கை மற்றும் குறிப்பெடுத்தல்
முகாமைத்துவ அறிக்கைக் கட்டமைப்பு
விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விளைவுகள்
பயன்பாட்டின் பொருள் விளக்கம்
மாறிகள் தொடர்பாக கருத்து தெரிவித்தல்
தரவுப் பகுப்பாய்வின் புள்ளிவிபரமுறைப் பயன்பாடு
செயலாற்றுகையினை ஒப்பீடு செய்தல்
முகாமைத்துவ அறிக்கைகளில் விகிதங்கள் மற்றும் சதவீதப் பயன்பாடு
கோட்டுச் சித்திரங்கள் மூலம் குறித்துக்காட்டல்
தொழில்சார் உரைகள் மற்றும் விரிவுரைகளுக்கு செவிமடுத்தல்
விடயம்சார் குழுக்களின் கலந்துரையாடல்
பேரவையின் திறமைகள்
உரைகளை நடாத்துதல்

**குறிப்பு**.- சித்தியெய்துவதற்காக விண்ணப்பதாரிகள் சகல வினாப்பத்திரங்களிலும் 40% ஆன புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

12.5 இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய மற்றும் 1670/ 32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பின் “இ” பின்னிணைப்பு)

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைத் திட்டமிடல் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் மணித்தியாலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 01 | திட்டமிடல் எண்ணக்கருக்கள் மற்றும் செயல் முறையியல், திட்டமிடல் நிறுவனங்கள் | 3 மணித்தியாலங்கள் | 09 |
| 02 | பொருளாதார பகுப்பாய்வு மற்றும் புள்ளிவிபரம் | 3 மணித்தியாலங்கள் | 10 |
| 03 | செயற்திட்டத் திட்டமிடல், அமுல் நடாத்துதல், தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு | 3 மணித்தியாலங்கள் | 11 |
| 04 | நிறுவன ரீதியான ஒழுங்குவிதிகள் மற்றும் அரசதுறை நிதியியல் முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 12 |
| 05 | ஆங்கில மொழி | 3 மணித்தியாலங்கள் | 13 |

12.5.1 சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் நியமனக் கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த கால எல்லையினுள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சையினை சித்தியெய்தியிருத்தல் வேண்டும் என்பதோடு, சகல பாடங்களிலும் ஒரே தடவையில் அல்லது வேறு வேறாக பாடங்களுக்கு பல தடவைகளில் தோற்றுவதற்கு அலுவலரொருவருக்கு அனுமதி உண்டு.

**பரீட்சை நடைமுறைகள் :**

12.5.2 ***திட்டமிடல் எண்ணக் கருக்கள், செயல்முறையியல் மற்றும் திட்டமிடல் நிறுவனங்கள் (பாட இலக்கம் 09) (100 புள்ளிகள்) :***

(i) தேசிய குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகள் மற்றும் அவைகளை அடைவதற்கான கொள்கை கட்டமைப்பும் நிகழ்ச்சித் திட்டங்களும் ;

(ii) தேசிய திட்டமிடலுக்கான செயல்முறையியல், திட்டமிடலிலுள்ள பாரிய சிக்கல் கொண்ட விடயங்கள், பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் வளங்களைப் பயன்படுத்தல் போன்றவை ;

(iii) தேசிய திட்டமிடலுக்கான தன்மையும் மூலங்களும், தரவுச் சேகரிப்பு, பொருட்கோடல், பகுப்பாய்வு, வெளிக்கள மேற்பார்வை மற்றும் விசாரணை குடித்தொகைப் பரம்பல் தொடர்பான எண்ணக்கருக்கள், பொருளியல் முற்கணிப்பு மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு ஆகியன.

12.5.3 ***பொருளாதார பகுப்பாய்வும் புள்ளிவிபரங்களும் (பாட இலக்கம் 10) (100 புள்ளிகள்) :***

(i) உற்பத்தி மற்றும் விநியோகித்தல் கோட்பாட்டிற்கு விசேட முக்கியத்துவத்துடன் கூடிய பொருளாதாரக் கொள்கைகள் ;

(ii) பணம், வங்கி முறைமைகள், பன்னாட்டு நிதியிடல் முறைமைகள் மற்றும் வியாபாரம் ;

(iii) நாணயப் பகுப்பாய்வு, நிதி வர்த்தகம் மற்றும் வரிக் கொள்கைப் பகுப்பாய்வு ;

(iv) இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு ;

(v) பொருளாதாரத்தின் மீளாய்வு ;

(vi) தொழில்நுட்ப ரீதியான செயல்திறனுடைய மற்றும் செயல்திறனற்ற மனிதவலு மற்றும் வெளிநாட்டு உதவிகள் உட்பட ஏனைய சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றின் பயன்பாடு ;

(vii) பொருளாதார மற்றும் சமூக நிகழ்வுகள் ;

(viii) பொருளாதாரப் பகுப்பாய்வு மற்றும் திட்டமிடலின் போது உபயோகப்படுத்தும் அடிப்படை புள்ளிவிபர எண்ணக்கருத்துக்களும் மற்றும் முறைமைகளும் ;

(ix) பயன்பெறுதல்/ செலவுப் பகுப்பாய்வு ஆகியனவற்றின் கோட்பாடுகள்.

12.5.4 ***செயற்திட்ட திட்டமிடல், அமுல்நடாத்தல், மேற்பார்வை தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு செய்தல் (பாட இலக்கம் -11) (100 புள்ளிகள்) :***

(i) செயற்திட்ட திட்டமிடல்களை மேற்கொள்ளல், இனங்காணல், வரையறுத்தல் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், கொள்கைகள், கோட்பாடுகள், அமைவிடங்களைத் தெரிவுசெய்தல், தொழில்நுட்பம், செலவு மற்றும் நன்மைகளை மதிப்பீடு செய்தல், தொழில்நுட்ப நிதியியல் மற்றும் பொருளாதார பகுப்பாய்வு ஆகியன.

(ii) செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல், வழிநடாத்துதல்/ கண்காணித்தல், செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை முறையாகவும் சரியான நேரத்திலும் நிறைவேற்றல், விபரமான செயற்பாட்டுத் திட்டங்களையும் அமுல்நடாத்தும் அட்டவணைகளையும் தயாரித்தல், தொடர் நடவடிக்கைளையும் முன்னேற்றக் கட்டுப்படுத்தல்களையும் ஒருங்கிணைத்தல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கை எடுத்தல் ;

(iii) செயற்திட்டங்களை மதிப்பீடு செய்தல், செயற்திட்டங்களினதும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் ஒட்டுமொத்தத்தினை மதிப்பீடு செய்தல் மற்றும் செலவிற்கு ஒப்பீடாக பயன்களைப் பகுப்பாய்வு செய்தல்.

12.5.5 ***நிறுவன ஒழுங்குவிதிகளும் அரசாங்க துறையின் நிதியியல் முறைமைகளும் (பாட இலக்கம் - 12) (100 புள்ளிகள்) :***

(i) அரசாங்க நிதியியல் ஒழுங்குவிதிகள் I ஆவது தொகுதி (X ஆவது அத்தியாயம் தவிர்ந்த).

(ii) தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் - VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிமுறை மற்றும் சட்டங்களின் அத்தியாயங்கள் I தொடக்கம் VI வரையும்.

(iii) இலங்கையின் நிதி நிர்வாகம்.- அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான இலங்கை நியதிச்சட்ட ஏற்பாடுகளின் நிதியிடல் கட்டுப்பாடு, அரசாங்க நிதி திரட்டிய நிதியம் மற்றும் அதனது செயற்பாட்டின் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு, ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிக்கோளும் ஒதுக்கீட்டு முறைமையும், அரசாங்க வருமானம், நிதி அமைச்சரின் அதிகாரமும் வகிபங்கும், திறைசேரியின் அதிகாரங்களும் வகிபங்கும், ஆணைச்சீட்டுக்கள் மற்றும் அதிகாரம்பெற்ற கட்டுநிதி அதிகாரம், கணக்காய்வாளர் நாயகமும் அவரின் அதிகாரங்கள் மற்றும் வகிபங்கு, அரச செலவின செயற்குழு, பொது முயற்சிகள் செயற்குழு ;

(iv) கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நியமனங்களும் அதிகாரங்களும் வகிபங்கும் ;

(v) அரச செலவின் திட்டமிடலும் முகாமைத்துவமும், அமைப்புக்களின் குறிக்கோள்களையும் வகிபங்குகளையும் இனங்காணல், வருடாந்த வருமானங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்தல் மற்றும் இறுதித் தீர்மானங்களை எடுத்தல், அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தில் மாற்றங்களை மேற்கொள்ளல், வீரமொங் வழிமுறையினை செயற்படுத்துதல், அரச துறை பதவி அணியின் முகாமைத்துவம், அரச குறைநிரப்பு மதிப்பீடு ;

(vi) அரச பெறுகை வழிமுறை.- பொருட்கள் சேவைகள் மற்றும் வேலை ஆகியனவற்றைப் பெறுதல், கேள்விப்பத்திர குழுக்களையும் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயற்குழுக்களின் நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் வகிபங்குகள், கேள்விப்பத்திர மதிப்பீட்டு வழிமுறைகள், வெளிநாட்டு நிதியுதவியினால் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களின் முகாமைத்துவம் ;

12.5.6 **ஆங்கில மொழி (பாட இலக்கம் 13) (100 புள்ளிகள்).**- திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் என்பவை தொடர்பான விண்ணப்பதாரியின் கல்வி மற்றும் தொழிற்றுறை தொடர்பான ஆங்கில மொழித் திறமையை அளவிடுவதற்காக ஆங்கிலம் தொடர்பான எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

**குறிப்பு** : சித்தியடைவதற்கு சகல வினாத்தாள்களுக்கும் 40% புள்ளிகளை விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.6 **இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (2013.12.23 ஆந் திகதிய 1842/ 2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் 'ஏ' இன் இணைப்பு)**

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமையினைப் பெறுகின்றார்கள்.

இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடங்கள் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 01 | பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 14 |
| 02 | அபிவிருத்தி நிருவாகச் செயற்பாடுகள் (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 15 |
| 03 | முகாமைத்துவத்துக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை | 3 மணித்தியாலங்கள் | 16 |
| 04 | இணைப்பு (ஆங்கில) மொழித் தேர்ச்சி | 3 மணித்தியாலங்கள் | 17 |

12.6.1 ***பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள் (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்).- (பாட இலக்கம் - 14) (100 புள்ளிகள்).-***
இலங்கையின் அண்மைக்கால பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வரலாற்றில் பொருளியல் மற்றும் சமூகவியல் கோட்பாடுகளைப் பிரயோகித்து பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை வகுத்தலில் தாக்கமேற்படுத்தும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.6.2 ***அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடு (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) (பாட இலக்கம் - 15) (100 புள்ளிகள்).-***
கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்பால் விசேட கவனம் செலுத்தி அபிவிருத்தி நிர்வாகத்திற்குப் பொறுப்பான நிறுவனங்கள், அவற்றின் இயக்கம் மற்றும் அவற்றிற்கிடையிலான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாளாகும் :-

(i) இலங்கையின் அரசாங்க அமைப்பு
(ii) இலங்கை அரசாங்க அமைப்பின் அரசியலமைப்புப் பின்னணி
(iii) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை நிறுவனங்கள்
(iv) மக்கள் அமைப்புக்கள்
(v) அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.6.3 ***முகாமைத்துவத்திற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை - (பாட இலக்கம் - 16) - (100 புள்ளிகள்).-***

*கீழே குறிப்பிட்ட விடயத்துறைகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவினைப் பரிசோதித்துப் பார்க்கின்ற இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையாகும் :-*

(i) *அரசாங்க நிறுவனங்களுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனையின் முக்கியத்துவம்*

(ii) *தரவுப் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை தயாரித்தல்*

(iii) *தரவுத்தள முகாமைத்துவம் மற்றும் தரவுகளை மீளப்பெறல்*

(iv) *கருத்திட்ட முகாமைத்துவத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை*

(v) *முகாமைத்துவ தகவல் முறைமையைத் தயாரித்தல்.*

**குறிப்பு.**- *இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.*

12.6.4 ***ஆங்கில மொழித் தேர்ச்சி (பாட இலக்கம் - 17) (100 புள்ளிகள்) :-***

Scheme of Evaluation : Written Examination
Content : The following subjects area are suggested for the candidates' reference.

* Communication Skills

The candidate should possess the ability to function effectively in the following language functions :-

- General Greetings and Introductions
- Giving and Getting Information
- Advising, Suggesting and Expressing Opinions
- Describing Events and Situation
- Telephone skills
- Interviewing skills
- Expression Skills
- Listening and Note Taking skills

* Writing Skills

The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study :

- Internal Modes of Communication
- Formal Correspondence Skills
- Writing Descriptions/Explanations
- Grammar
- Summary Writing Skills
- Report Writing Skills
- Meeting Minutes/Agendas/Invitation

* Comprehension Skills

Candidate's ability to comprehend a printed text infer meaning and verbal/written interpretation is expected :

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (verbal/written)
- Understanding the cohesion and coherence of a passage

**குறிப்பு.**- *இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.*

**12.7 இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 04 ஆவது பின்னிணைப்பு)**

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமையினைப் பெறுகின்றார்கள்.

இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 01 | முகாமைக் கணக்கீடு | 3 மணித்தியாலங்கள் | 18 |
| 02 | அரசாங்க பொது நிதி முகாமை | 3 மணித்தியாலங்கள் | 19 |
| 03 | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு | 3 மணித்தியாலங்கள் | 20 |

***12.7.1 முகாமைக் கணக்கீடு (பாட இலக்கம் - 18) 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரமாகும் (100 புள்ளிகள்) :-***

வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

கணக்கீட்டில் கட்டுப்பாட்டுக் கோட்பாடு பின்னூட்டல், திறந்ததும் மற்றும் மூடியதும், அடிப்படை மற்றும் பிரயோகத்திற்கு உகந்த, நிலையான செலவு முறைகள், செயல்திறன் தரங்கள் மற்றும் மதிப்பீட்டு நியமங்கள் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அவற்றினை ஈடுபடுத்தும் பிரயோக முறைகள், தரத் திருத்தங்கள், கற்றல் வளைவு மற்றும் உள்நோக்கத்தினைத் தீர்மானித்தல், ஆய்வு முரண்களையும் உப முரண்களையும் பகுத்தல், அவற்றின் முக்கியத்துவம், முன்வைத்தல் மற்றும் விசாரணை செய்தல், கட்டுப்பாட்டுக் கணக்கீட்டு சார் தொழிற்படு வகைகள், வரவுசெலவுத்திட்ட தயாரிப்பிற்கான எண்ணக்கரு, வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடு தொடர்பான நிர்வாகம், வரவுசெலவுத் திட்டக் குறியீடு, நிலையான மற்றும் வளைதகு பாதீடு, பிரதான மற்றும் இடைக்கால பாதீட்டு ஆவணம், பாதீட்டு மையம், வரவுசெலவுத் திட்டத்தினைத் தயார்படுத்தலில் முகாமையின் கலந்துகொள்ளல், தலையிடுதல் மற்றும் உள்நோக்கம், பாதீட்டுக் காலமும் பிரதான பாதீட்டுக் காரணிகளை இனங்காணலும்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

***12.7.2 அரசாங்க பொது நிதி முகாமை (பாட இலக்கம் - 19) - 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரமாகும் - (100 புள்ளிகள்)***

வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**அரசாங்க கணக்காளரின் பங்கு :**

அரசாங்க நிதி தொடர்பான அரசியலமைப்பு மற்றும் சட்டவமைப்பு, நிர்வாகமைப்பு, மத்திய அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், கூட்டுறவு வியாபாரம் என்பன பற்றிய அறிவு.

பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, பொதுத் திறைசேரியின் கடமைகள், திட்டமிடல் அமைச்சு, மதிப்பீட்டுச் செயற்குழு, கணக்காய்வாளர், அரசாங்க கணக்குக் குழு, திரட்டிய நிதியம், பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் பிரச்சினைகள்.

நிதிச் சுழற்சி, திட்டமிடலுக்கான நிகழ்ச்சித் திட்டத்தினைத் தயாரித்தல், வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்தல், நிதியியலினை அங்கீகரித்தல், கணக்கிடுதல் நடவடிக்கை, மதிப்பீடு மற்றும் கணக்காய்வு.

செயற்திட்டங்களை மதிப்பீடு செய்தல், சேவை கேள்வி மனு மற்றும் எண் ரீதியான தரவுப் பயன்பாடு, கொடுப்பனவு கோட்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பெறுமானத்தினைத் தீர்மானித்தல்.

செலவுப் பயன் பகுப்பாய்வு, தள்ளுபடி செய்யப்பட்ட பணப் பகுப்பாய்வு, உள்நாட்டு உற்பத்தி விகிதம், நடைமுறையியல் செயற்திட்டங்கள், செயற்திட்டங்கள் தயாரித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பான பொருளாதார நிதியியல் மற்றும் முகாமைத்துவப் பிரிவு, வெற்றிகரமாக செயற்திட்டங்களை முன்வைத்தல்.

நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதன் நுட்ப முறை, வலைய பகுப்பாய்வு முறையினைப் பயன்படுத்தல், வளங்கள் உரிமை மாற்றல், போக்குவரத்து தொடர்பான சிக்கல்கள், பயன்பாட்டிற்கு எடுத்தல் மற்றும் காலப்போக்கில் வீழ்ச்சியடையும் சொத்துக்கள் மற்றும் அவ்வாறு வீழ்ச்சியடையாதவை, என்றாலும் குறித்த காலம் பாவனை செய்த அல்லது காலம் கடந்ததன் பின்னர் அல்லது பயனற்றதாக மாறும் சொத்துக்குப் பதிலாக சொத்துக்களை ஈடுபடுத்துதல், செயலாற்றுகை வரவுசெலவுத் திட்ட அறிக்கை, அடிப்படை முறைமை உருவாக்கம் மற்றும் பயன்பாடு, செயலாற்றுகையினை அளவிடுதல், அளவீட்டு வகைகள், அலகுகள் மற்றும் நிர்ணயங்களைத் தேர்ந்தெடுத்தல், அளவீட்டு முறைகள் மற்றும் செயலாற்றுகைப் பகுப்பாய்வு.

நிகழ்ச்சித் திட்டப் பாதீடு, நிகழ்ச்சித் திட்டக் கட்டமைப்பு, பணிகள் அடிப்படையில் வகைப்படுத்தல், நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கைகள், செலவுச் செயற்திட்டங்கள் மற்றும் செலவு விடயங்கள், பொருளாதார மற்றும் செயல்பாட்டு வகைப்படுத்தல்

நிதிக் கட்டுப்பாட்டு முறை, பொறுப்பாட்சி, உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிதி ஒழுங்குவிதிகள், உள்ளகக் கணக்காய்வு, வினைத்திறன் கணக்காய்வு, முகாமைத்துவ கணக்காய்வு, மாறிலிப் பகுப்பாய்வு, மூலதன பாதீட்டினைத் தயாரித்தல் தொடர்பான தீர்மானம், நீண்டகால முறைமையினைத் தயாரித்தல் மற்றும் அதன் முக்கியத்துவம், முன்நிகழ்ச்சியிடல், சரிநிலை மற்றும் வரையறைகள், இடர் பகுப்பாய்வு, தீர்மான விருட்சம், நிபந்தனைக்குட்பட்ட காரணிகள்.

மூலதனத்திற்கான கேள்வி, மூலதன உற்பத்தி மற்றும் ஊதியத்தினை மதிப்பிடுவதில் பிரச்சினை, செயற்திட்டங்களை முன்னுரிமைப்படுத்த நிபந்தனையிடும்போது நிச்சயமற்றதாக மாறுதல், திருப்பிக்கொடுக்கும் அணிக்கோவை, பயன் விகிதாசாரத்தினைக் கணக்கிடுதல், தேறிய தற்போதைய பெறுமதி மற்றும் தள்ளுபடி செய்யப்பட்ட பணப் பரிமாற்றத்தின் நலன்கள், வரி அறவிடலின் தாக்கம், முதலீட்டுக் கணிப்பு, கருத்திட்டச் செலவுக் கட்டுப்பாடு மற்றும் இறுதிக் கணக்காய்வு.

உட்பிரமாணத் தீர்மானங்கள், உற்பத்திக் கலவை, உற்பத்தி செய்தல் அல்லது கொள்வனவு செய்தல், உற்பத்தி மாற்று முறைகள், தொழிற்சாலைகளை மூடிவிடல் தொடர்பான பிரச்சினைகள், விலையிடல் கொள்கைகள் மற்றும் பங்களிப்புக் கோட்பாடு, நுகர்வோரின் கேள்விப்போக்கின் தாக்கம், தேவையின் மீள் சக்தி, சந்தைப்படுத்தலின் மூல உபாயம், செயலாற்றுகை மதிப்பீட்டு நுட்பமுறை, இலாபத்தன்மை தொடர்பான அணிக்கோவை மற்றும் விகிதாசாரம்.

செலவின் அனுகூலப் பகுப்பாய்வு, நடப்பு மூலதன முகாமைத்துவம்.

அரசாங்க வணிக வியாபாரங்களின் நிதிக் கட்டுப்பாடு, வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு, முகாமைத்துவத்தினை அறிக்கையிடல், கணக்கின் பொருள் விளக்கம் மற்றும் நிதி விகிதாசாரப் பயன்பாடு.

அரசாங்க நிறுவனங்களில் விலையினை நிர்ணயித்தல்

கணக்குத் திட்டத்தினை உள்ளடக்கிய விடயங்கள், அரசாங்க அறிக்கைகள் மற்றும் அரசாங்க வியாபாரங்கள்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.7.3 ***முகாமைத்துவம் மற்றும் அமைப்பு (பாட இலக்கம் - 20) - 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரமாகும். (100 புள்ளிகள்)***

வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

முகாமைத்துவம் மற்றும் அமைப்புக் கோட்பாடுகள் தொடர்பாக அபேட்சகரின் அறிவு, அரச பிரிவுகளின் பிரச்சினைகள் மற்றும் வினாக்கள் தொடர்பாக இக்கோட்பாடுகளின் பயன்பாட்டினைப் போன்றே நவீன

முகாமைத்துவ உத்திகள் மற்றும் நுட்பமுறைகள் பற்றிய அவரின் அறிவினைத் தீர்மானிப்பதற்காக இப்பாடத்துடன் தொடர்புடைய வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.8 இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/ 32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பின் "ஈ" பின்னிணைப்பு)

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைத் திட்டமிடல் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

12.8.1 இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :-

| தொடர் இலக்கம் | பாடங்கள் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 01 | அபிவிருத்தித் திட்டமிடலின் நுட்பங்கள் | 3 மணித்தியாலங்கள் | 21 |
| 02 | அடிப்படைப் பேரினப் பொருளியல் | 3 மணித்தியாலங்கள் | 22 |
| 03 | தற்போதைய சர்வதேசப் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். | 3 மணித்தியாலங்கள் | 23 |

12.8.2 வினாத்தாளிலுள்ள சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டியது கட்டாயமாகும் பரீட்சை நடைமுறைகள் :

(ஐ) ***அபிவிருத்தித் திட்டமிடலின் நுட்பங்கள் : (பாட இலக்கம் - 21) - (100 புள்ளிகள்)***

(i) ஸ்வொட் (SWOT) ஆய்வு
(ii) பிரச்சினை விருட்சம்
(iii) தர்க்க ரீதியான வேலைச் சட்டக பகுப்பாய்வு
(iv) கிரய - நன்மை பகுப்பாய்வு
(v) திரும்பச் செலுத்தும் முறை
(vi) தேறிய தற்போதைய பெறுமதி
(vii) உள்ளகப் பயன் விகிதாசாரம்
(viii) நிழல் விலையின் பிரயோகம்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

(II) ***அடிப்படைப் பேரினப் பொருளியல் (பாட இலக்கம் - 22) (100 புள்ளிகள்)***

(i) தேசிய கணக்குகள்
(ii) பொருளாதார விருத்தியின் வேகம்
(iii) சமனிலைப்படுத்தப்பட்ட தேசிய வருமானம்
(iv) பெருக்க விளைவுகள்
(v) பண வீக்கம்
(vi) வட்டி விகிதாசாரம்
(vii) அரசிறைமைக் கொள்கைக்கான அறிமுகம்
(viii) இறைமைக் கொள்கைகளுக்கான அறிமுகம்
(ix) வியாபாரச் சக்கரம்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

(III) ***தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். (பாட இலக்கம் - 23) (100 புள்ளிகள்)***

தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். (அவ் அப்போதைய சந்தர்ப்பங்களில் ஏற்படும் உலகப் பொருளாதார நிலைமைகளுக்கு காலத்துக்கேற்ற வகையிலான தலைப்புக்களுக்கு உரித்துடைய விடைகளை வழங்குதல்.)

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. இப்பரீட்சைக்கான பரீட்சை நேர அட்டவணை கீழ்வருமாறு அமைந்துள்ளது :

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 01-I | 2020.10.24 | மு.ப. 9.00- நண்பகல் 12.00 |
| | | இலங்கையின் சட்ட முறைகள் | 01-II | 2020.10.24 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 01-III | 2020.10.25 | மு. ப. 9.00 - பி. ப. 12.00 |
| | | நிர்வாகம் | 02-I | 2020.10.25 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| | | பொருளியல் மற்றும் சமூகவியல் | 03 | 2020.10.31 | மு.ப. 9.00- நண்பகல் 12.00 |
| | | அரசாங்கத் துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடைமுறை | 04 | 2020.10.31 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| 02 | இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | நிதி முறைகள் | 05-I | 2020.11.01 | மு.ப. 9.00- நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-II | 2020.11.01 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| 03 | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத் திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | நிதி முறைகள் | 05-II | 2020.11.08 | மு.ப. 9.00- நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-III | 2020.11.08 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| 04 | இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | நிதி முறைகள் | 05-II | 2020.11.08 | மு.ப. 9.00- நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-III | 2020.11.08 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 05 | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | அரசாங்க நிதியியல் வழிமுறை | 06 | 2020.10.24 | மு.ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | சட்டம் மற்றும் முகாமைத்துவம் | 07 | 2020.10.24 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| | | நிர்வாகம் | 02-IV | 2020.10.25 | மு.ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்து வத்திற்கு தகவல்களை முன்வைத்தல் | 08 | 2020.10.25 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| 06 | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | திட்டமிடல் எண்ணக் கருக்கள் மற்றும் செயல் முறையியல், திட்டமிடல் நிறுவனங்கள் | 09 | 2020.10.24 | மு.ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | பொருளாதார பகுப்பாய் வும் புள்ளிவிபரமும் | 10 | 2020.10.31 | மு.ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | கருத்திட்டங்களை திட்டமிடல், அமுல் நடாத்துதல், தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு. | 11 | 2020.10.31 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| | | தாபன ஒழுங்குவிதிகளும் அரசாங்க துறையின் நிதியியல் முறைமைகள் | 12 | 2020.11.07 | மு.ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | ஆங்கில மொழி | 13 | 2020.11.07 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| 07 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர் களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 14 | 2020.11.07 | மு.ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 15 | 2020.11.08 | மு.ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | முகாமைத்துவத்திற்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை | 16 | விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் இலங் கை அபிவிருத்தி நிருவாக நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தினால் செயல்முறைப் பரீட்சை நடைபெறும் திகதி விண்ணப்ப தாரிகளுக்குப் பின்னர் அறிவிக்கப்படும் | |
| | | இணைப்பு (ஆங்கிலம்) மொழித் தேர்ச்சி | 17 | 2020.11.08 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 08 | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | முகாமைக் கணக்கீடு | 18 | 2020.11.01 | மு.ப. 9.00- நண்பகல் 12.00 |
| | | அரசாங்க பொது நிதி முகாமைத்துவம் | 19 | 2020.11.01 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| | | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு | 20 | 2020.11.07 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| 09 | இலங்கைத் திட்ட மிடல் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | அபிவிருத்தித் திட்ட மிடலின் நுட்பங்கள் | 21 | 2020.10.24 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |
| | | அடிப்படைப் பேரினப் பொருளியல் | 22 | 2020.11.08 | மு.ப. 9.00- நண்பகல் 12.00 |
| | | தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளா தாரத்திற்கு ஏற்படும் தாக்கம் | 23 | 2020.11.08 | பி. ப. 12.45 - பி. ப. 3.45 |

14. 14.1 **வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு உரித்துடைய பாடங்களில் சித்தியெய்தும் தேவைப் பாட்டிலிருந்தான விலக்களிப்புக்கள் பின்வரும் விதத்தில் செய்யப்பட வேண்டும் :**

| பரீட்சை | பாடம் | விலக்களிப்பதற்குத் தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | சட்டம் | பரிஸ்ட்டர் (Barrister), அல்லது இலங்கை உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞராக இருத்தல். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டதாரியாக இருத்தல். |

**குறிப்பு 1**.- இலங்கை நிர்வாக சேவையின் 2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க சேவைப்பிரமாணக் குறிப்பின்கீழ் 2012.07.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.23 ஆந் திகதிவரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான குறித்த சேவைப் பிரமாணக் குறிப்பின்படி முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டலில் சமூகவியல் மற்றும் பொருளியல் பாடங்களுக்கு வழங்கப்படும் விலக்களிப்பு இதற்குப் பொருந்தும்.

14.2 இலங்கை நிர்வாகசேவைப் பிரமாணக் குறிப்பின் 1.5 (ஆ) இன் இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, மேற்படி சேவைப்பிரமாணக் குறிப்பானது அமுலுக்கு வரும் திகதியன்று (2012.07.01 ஆந் திகதியன்றுக்கு) முன்னைய சேவைப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின்கீழ் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்துமாறு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2014.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு அதனைச் சித்தியெய்துவதற்கு இயலாமலிருக்கும் அலுவலர்கள் ஏற்கனவேயுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினதும் பாடங்களுக்கு ஒத்திசையும் ஏற்கனவேயுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பின்கீழ் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பாடங்களை சித்தியெய்துவதன் மூலம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினைப் பூர்த்திசெய்தல் வேண்டும். ஒத்திசைவுடைய பாடங்கள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | 2005.11.14 ஆந் திகதிய 1419 / 3 ஆம் இலக்க முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பு | 2013.12.23 ஆந் திகதிய 1842/ 2 ஆம் இலக்க புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு |
|---|---|---|
| 01. | சட்டம் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) | சட்டம் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) |
| 02. | நிர்வாகம் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) | நிர்வாகம் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) |
| 03. | பொருளியல் மற்றும் சமூகவியல் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகவியல் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) |
| 04. | அரச துறையின் நிதியியல் முகாமைத்துவம் (இரண்டாம் வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) | அரசாங்கத் துறையின் நிதியியல் முகாமைத் துவம் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) |
| 05. | ஆங்கிலம் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) | இணைப்பு (ஆங்கில) மொழித் தேர்ச்சி (இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) |
| 06. | பொருளியல் மற்றும் சமூகக் கொள்கைகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகக் கொள்கைகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) |
| 07. | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) |
| 08. | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு முறைகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) | முகாமைத்துவத்திற்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை (இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) |

15. **பெறுபேறுகளை வெளியிடுதல்.**- இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த/ தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். இலத்திரனியல் ஆவணம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் தொடர்பாக சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட SP/SB/1/13 ஆம் இலக்க மற்றும் 2009.10.13 ஆந் திகதிய சுற்றறிக்கையின்படி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேறு அலுவலர்களுக்கு வெளியிடப்பட்டதாக கருதப்பட வேண்டும். அதற்கிணங்க, திணைக்களத் தலைவர்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேற்றின் குறித்த பிரதிகளை அலுவலரின் பிரத்தியேகக் கோவையில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

16. இப்பரீட்சை அறிவித்தல் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமானது அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இறுதித் தீர்மானமாகக் கொள்ளப்படும்.

17. இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகின்றது. குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சர்.

அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2020, செத்தெம்பர் 16.

10-76

## கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்

### இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (2020)

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020, திசெம்பர் மாத ஆரம்பத்தில் கண்டியில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிக்கு கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக் கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்.**- முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குப் பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் அதன் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :-

| விடயம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நிதி முறைமைகள் | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. நிருவாகம் | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் - 1 | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| 4. திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் - 2 | 3 மணித்தியாலம் | 100 | 40 |

5. பரீட்சைக்கான பாடப்பரப்பு :

| விடயம் | பாடப்பரப்பு |
|---|---|
| 1. நிதி முறைமைகள் | (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணம்- (X ஆம் அத்தியாயம் தவிர) |
| 2. நிர்வாகம் | (அ) அலுவலக முறை, அலுவலக முகாமை மற்றும் அலுவலக ஒழுங்குபடுத்தும் முறைமைகள் தொடர்பான அறிவு<br>(ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியினூடாக திருத்தம் செய்யப்பட்ட தாபன விதிக்கோவை அத்தியாயம் I-XXII மற்றும் தாபன விதிக் கோவையின் VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XIX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள் |
| 3. திணைக்களப் பிரமாணம் 1 | விலங்குச் சட்டம், விலங்கு நோய்ச் சட்டம் மற்றும் திணைக்களக் கட்டளை கால்நடை வைத்திய சேவைக்கு பொருத்தமான சுற்றுநிருபங்கள் |

| விடயம் | பாடப்பரப்பு |
|---|---|
| 4. திணைக்களப் பிரமாணம் 2 | (அ) மாதிரிகளை அனுப்புதல், பிரேத பரிசோதனை உள்ளிட்ட நோய் ஆய்வு, உறுதி ஆய்வுகூட பரிசோதனை முறைகள், கர்ப்பப் பரிசோதனை உள்ளிட்ட இனங்காணும் பரிசோதனை, வெளிக்கள நோய் ஆய்வு உறுதி பரிசோதனை, விலங்குகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து, குருதிபாயம் (Sera) ஆகிய முற்காப்பு நடவடிக்கைகள்.<br><br>(ஆ) செயற்கை முறைச் சினைப்படுத்தல் செயல் முறையும் தொழில் நுட்பமும், இனப்பெருக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களும் கன்று வளர்ப்பும், அடைகாத்தல், குஞ்சு பொரித்தல், கோழிக் குஞ்சு வளர்ப்பு, கால்நடைகளுக்கான போசணை, உணவுப் பண்டம், பசுந்தீவனப் பயிர்ச்செய்கை, வெவ்வேறுபட்ட பயிர்கள் புற்செய்கை, உலர் புல், சைலேஜ் தயாரிப்பு, கால்நடைப் பராமரிப்பு என்பன.<br><br>(இ) பால் உற்பத்தி, கிருமி அழிக்கப்பட்ட பாலை போத்தல்களில் அடைத்து எடுத்துச் செல்லல், பால் சுகாதாரம், பாதுகாப்பு, பால் ஆடை பகுத்தல் உள்ளடங்கலாக பரிசீலனை செய்தல், பால் ஆடை நீக்கல், பட்டர் நெய் மற்றும் தயிர் உற்பத்தி.<br><br>(ஈ) அறுப்பு நிலையங்களில் விலங்கு அறுப்புச் செய்தல் இறைச்சிகளை இனங்காணுதல் உட்பட இறைச்சிகளைப் பரீட்சித்தல். |

6. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கண்டியில் அமையப்பெறும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

7. விண்ணப்பப்பத்திரங்கள் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் அந்தத்தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 6 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

8. பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவார்.

9. விண்ணப்பங்கள் யாவும் 2020, ஒற்றோபர் 23 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக் கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் :-

கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இல. 13,
கெட்டம்பே, பேராதனை.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்திற்கு அமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியவராயின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரரது கையொப்பம் மற்றும் திணைக்களத் தலைவரது சான்றிதழ் என்பவற்றுடன்

சரியாகப் பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே, அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் மற்றும் திணைக்கள இணையத்தளத்தில் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும்.

அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பதாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதத்தை தொலைநகலின் ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்பி வைப்பதற்காக விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது சிறந்ததாகும். அங்கு தேவையான தகவல்களை உறுதிசெய்து கொள்வதன் பொருட்டு விண்ணப்பதாரரினால் தன்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பம் பதிவுத்தபாலிலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

11. மேலே 10 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர் பரீட்சை மண்டபத்தினுள் தாம் அமரும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) ஏற்றுக்கொள்ளத்தக்க கடவுச்சீட்டு ;
(iii) ஏற்றுக்கொள்ளத்தக்க இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரரது ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ள இயலுமாகின்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை மண்டபத்திற்கு நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழையவிடமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் உள்நுழைந்தது முதல் பரீட்சை முடியும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு அடையாளம் காண இயலுமாகும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்பட வுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.
(ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-
முழுப்பரீட்சை - ரூபா 1,200.00
ஒரு பாடம் - ரூபா 600.00

இப்பரீட்சைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ள அல்லது தற்போதைக்கு அமர்ந்துள்ள விண்ணப்பதாரர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு தபால்/உப தபால் பணிமனையில் அல்லது பிரதேச/மாவட்ட செயலாளர் பணிமனைக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

14. விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

16. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே மொழி மூலங்களில் ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது ஏதேனும் முரண்பாடுகள் எழுமிடத்து சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

டாக்டர் ஆர். ஹெட்டியாரச்சி,
கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,

கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களம்,

2020, செத்தெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் அமைச்சு**

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2017 (2020)

THE 1ST EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE - 2017/(2020)

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :-

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :...............................................................................
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் :
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :.............................................................................
(உதாரணம் GUNAWARDHANA, H. M. S. K.)
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :...............................................................................

2. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :...............................................................................
(அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக)

3. பால் :

பெண் - 1
ஆண் - 0

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5. கையடக்க தொலைபேசி இலக்கம் :

6. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

| பாட இலக்கம் | பாடம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

7. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளீரா அல்லது தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :-
........................................................................................................................................................................
........................................................................................................................................................................

8. பிறந்த திகதி :

வருடம் : மாதம் : திகதி :

9. பதவிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

திணைக்களத்தின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

10. இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமை உள்ளது எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் : ரூபா ----.

பணம் செலுத்தப்பட்ட பணிமனை :----. பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை வைத்துக்கொள்ளவும்.) |
|---|

------------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும் அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

*விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.
(அலுவலக முத்திரை)

திகதி :----.

*10-160/1*

---

## கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான
இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2017 (2020)

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020, திசெம்பர் மாத ஆரம்பத்தில் கண்டியில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி அன்று கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்.**– இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குப் பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் அதன் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாப்பத்திரம் | விடய இல. | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|---|
| 1 ஆம் பகுதி | 01 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| அல்லது | | | | |
| 2 ஆம் பகுதி | 02 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| மற்றும் | | | | |
| 3 ஆம் பகுதி | | 3 ஆம் பகுதியில் 02 பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும். | | |
| 1. வினாப்பத்திரம் | 03 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. வினாப்பத்திரம் | 04 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. வினாப்பத்திரம் | 05 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 4. வினாப்பத்திரம் | 06 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 5. வினாப்பத்திரம் | 07 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 6. வினாப்பத்திரம் | 08 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 7. வினாப்பத்திரம் | 09 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 8. வினாப்பத்திரம் | 10 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 9. வினாப்பத்திரம் | 11 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 10. வினாப்பத்திரம் | 12 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 11. வினாப்பத்திரம் | 13 | 03 மணித்தியாலம் | 100 | 40 |

**5. பரீட்சை தொடர்பான பாடப்பரப்பு :**

| வினாப்பத்திரத்தின் பெயர் | விடய இல. | பாடப்பரப்பு |
|---|---|---|
| 1 ஆம் பகுதி | 01 | பாடப்பரப்பின் 2:1, 2:2, 4:1, 4:2, 5:2, 5:8, 6:5, 7:2:1, 8:2, 8:2:2, 8:2:3, 8:3:1, 9:2, 9:4, 9:6, 9:7 பகுதிகள் |
| 2 ஆம் பகுதி | 02 | 1:1:1, 1:1:4, 1:2:1, 3:2, 3:1:1, 3:1:2, 3:2:1, 10:1:1, 10:1:2, 10:1:3, 10:1:4, 10:1:6, 10:2:1, 10:2:8 மற்றும் 10:4:1 பகுதிகள் |
| 3 ஆம் பகுதி : | | |
| வினாத்தாள் 1 | 03 | தொற்றுநோயியல் |
| வினாத்தாள் 2 | 04 | கால்நடைப் பொருளியல் |
| வினாத்தாள் 3 | 05 | மிருக வைத்திய பொதுச் சுகாதாரம் |
| வினாத்தாள் 4 | 06 | விவசாய விஸ்தரிப்பு |
| வினாத்தாள் 5 | 07 | பரம்பரையியலும் சினைப்படுத்தலும் |
| வினாத்தாள் 6 | 08 | விலங்கு உடற்றொழிலியலும் இனப்பெருக்கமும் |
| வினாத்தாள் 7 | 09 | கால்நடைகளுக்கான வீடமைப்பு மற்றும் முகாமைத்துவம் |
| வினாத்தாள் 8 | 10 | விலங்குப் போசணை |
| வினாத்தாள் 9 | 11 | பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர் |
| வினாத்தாள் 10 | 12 | பிரயோக மிருகவியல் நுண்ணுயிரியலும் நீர்ப்பீடனவியலும் |
| வினாத்தாள் 11 | 13 | பிரயோக மருத்துவம், நோயியல் மற்றும் ஒட்டுண்ணியியல் |

**குறிப்பு.**- இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை விண்ணப்பதாரிகள் அமர வேண்டியது பகுதி 1 அல்லது பகுதி 2 வினாப்பத்திரம் இரண்டில் ஒன்றுக்கும் மற்றும் 3 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள II வினாப்பத்திரங்களில் இருந்து இரு வினாப்பத்திரங்களுக்கும் மட்டும் அமரல் வேண்டும். சித்தி எய்துவதன் பொருட்டு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் பெறுதல் வேண்டும்.

*6. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.*

*7. விண்ணப்பப்பத்திரங்கள் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்துக் கொள்ளவும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.*

*8. பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.*

*9. விண்ணப்பங்கள் யாவும் 2020, ஒற்றோபர் 23 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக் கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் :-*

*கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,*
*கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்,*
*த. பெ. இல. 13,*
*கெட்டம்பே, பேராதனை.*

*10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்திற்கு அமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியவராயின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரரது கையொப்பம் மற்றும் திணைக்களத் தலைவரது சான்றிதழ் என்பவற்றுடன் சரியாகப் பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே, அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் மற்றும் திணைக்கள இணையத்தளத்தில் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும்.*

*அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பதாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் மேற் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதத்தை தொலைநகலின் ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்பி வைப்பதற்காக விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது சிறந்ததாகும். அங்கு தேவையான தகவல்களை உறுதி செய்து கொள்வதன் பொருட்டு விண்ணப்பதாரரினால் தன்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பம் பதிவுத் தபாலிலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.*

*11. மேலே 10 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.*

*12. பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர் பரீட்சை மண்டபத்தினுள் தாம் அமரும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.*

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரரது ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ள இயலுமாகின்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை மண்டபத்திற்கு நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய விடமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் உள் நுழைந்தது முதல் பரீட்சை முடியும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு அடையாளம் காண இயலுமாகும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்பட வுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

| | | |
|---|---|---|
| முழுப்பரீட்சை | - ரூபா | 1,200.00 |
| ஒரு பாடம் | - ரூபா | 600.00 |

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள அல்லது இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ள அல்லது தற்போதைக்கு அமர்ந்துள்ள விண்ணப்பதாரர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு தபால்/ உப தபால் பணிமனையில் அல்லது பிரதேச/ மாவட்ட செயலாளர் பணிமனைக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

14. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

15. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே மொழி மூலங்களில் ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது ஏதேனும் முரண்பாடுகள் எழுமிடத்து சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

டாக்டர் ஆர். ஹெட்டியாராச்சி,
கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களம்,
2020, செத்தெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் அமைச்சு**

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2017 (2020)

THE 2ND EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE - 2017/(2020)

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :-

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :..........................................................
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் :
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :..........................................................
(உதாரணம் GUNAWARDHANA, H. M. S. K.)

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :..........................................................

2. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :..........................................................
(அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக) ..........................................................

3. பால் :

பெண் - 1

ஆண் - 0

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5. செல்லிடைபேசி இலக்கம் :

6. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

| பாட இலக்கம் | பாடம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

7. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளீரா அல்லது தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :.......................................................

8. பிறந்த திகதி :

வருடம் : மாதம் : திகதி :

9. பதவிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :.................................................................................................................

திணைக்களத்தின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :.........................................................................................

10. இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

மேற் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணபத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

10. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் : ரூபா ----.

பணம் செலுத்தப்பட்ட பணிமனை :----. பற்றுச்சீட்டு இலக்கம் :----.

பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை வைத்துக்கொள்ளவும்.)

------------.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணபதாரிக்கு தகைமையுள்ளது எனவும் அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

*விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

------------,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.
(அலுவலக முத்திரை)

திகதி :----.

*(கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

10-160/2

## வர்த்தக அமைச்சு

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

### அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் இரசாயன ஆய்வுகூட உதவியாளர்கள் பதவிக்காக பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை - 2020

### Open Competitive Examination for the Recruitment to the Trainee Grade of the Posts of Lab Assistant of the Sri Lanka Technological Service of Department of Measurement Units, Standards and Services - 2020

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின், இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் இரசாயன ஆய்வுகூட உதவியாளர் பதவியின் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 2020.11.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் இரசாயன ஆய்வுகூட உதவியாளர் பதவியின் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

01. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு நிதி செலுத்த வேண்டும் ;
(ii) இப் பதவி மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் காலப்பகுதிக்குட்பட்டது ;
(iii) அரச மொழிக் கொள்கையின் பிரகாரமும் மற்றும் 07/ 2007 என்ற இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் விதிகளுக்கமையவும் உரிய காலத்திற்குள் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

02. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்**:

பயிலுநர் தரம்
1 ஆம் வருடம் - ரூபா 27,140.00 மாதாந்த கொடுப்பனவு
2 ஆம் வருடம் - ரூபா 27,440.00 மாதாந்த கொடுப்பனவு
வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 7,800.00

03. **கல்வித் தகைமைகள்**: இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களுள் பௌதீகவியலுடன் மூன்று பாடங்களில் க. பொ. த. (உ.த.) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

பழைய பாடத்திட்டத்திற்கேற்ப பௌதீகவியலுடன் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி.

மற்றும்

மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தி.

04. **வேறு தகைமைகள்** .-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது 18 - 30 இற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். அதற்கு அமைய 2002.11.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன் அல்லது 1990.11.02 ஆந் திகதி அல்லது அதற்கு பின் பிறந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் ஆவர். (தற்போது அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/அரசாங்க கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் கடமையாற்றுபவர்களுக்கு அதிகூடிய வயதெல்லை 45 ஆக இருப்பதுடன், விண்ணப்பங்கள் யாவும் அவர்களின் திணைக்களத் தலைவர்களூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்);
(iii) நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை**.- மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையொன்றில் சித்தி பெறல் வேண்டும். அப்பரீட்சையில் சித்தியடையவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் 40% அல்லது அதற்கு மேலான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகளின் மொத்த புள்ளிகளின் தகைமைகளின் தொடர் இலக்க அடிப்படையில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான எண்ணிக்கைக்குச் சமமான அபேட்சகர்களின் பெறுபேற்று அட்டவணையொன்றினை தகுதிகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக, அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தகைமை களைப் பூர்த்தி செய்தோரும், இரு பாடங்களிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றோரும் பயிலுநர் தரத்திலான பயிற்சி நெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர். பரீட்சைக்குத் தோற்றிய சகலரினதும் பெறுபேறுகளை அறியத்தருவதும் அல்லது அதனை www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடுவதும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

06. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரமே நடைபெறும்.

07. **எழுத்துப் பரீட்சை** : பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமும் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றும் வினாப்பத்திரங்கள் யாவற்றுக்கும் விண்ணப்பித்த மொழியிலே விடையளித்தல் வேண்டும்.

பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது.

1. **நுண்ணறிவுத் தேர்வு**.- மொத்தம் 100 புள்ளிகள் நேரம் : 01 மணித்தியாலம்
பரீட்சார்த்தியின் தர்க்கவியல், கணித ரீதியிலான சிக்கல்களைத் தீர்த்தல், பொது அறிவு, தீர்மானிக்கும் இயலுமை போன்ற விடயங்கள் தொடர்பிலான அறிவினை பரிசீலிப்பதற்காக தயாரிக்கப்படும் இவ்வினாப் பத்திரம் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் முறையிலான 50 மாதிரி வினாக்களைக் கொண்டதாகும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

2. **தொழில்நுட்ப வினாப்பத்திரம்**.- மொத்தம் 100 புள்ளிகள் நேரம் : 02 மணித்தியாலங்கள்
அளவீடு செய்தல் மற்றும் பிரயோக பௌதீகவியல் சம்பந்தமான அறிவை மட்டிடும் வினாப்பத்திரமொன்றாகும். க.பொ.த. (உ.த.) அளவிலான அறிவு இது சம்பந்தமாக போதுமானதாகும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

08. **விண்ணப்பப் படிவமும், விண்ணப்பிக்கும் முறையும்**.- விண்ணப்பப்படிவத்தில் தலைப்புக்கள் 01 தொடக்கம் 10 வரை முதலாம் பக்கத்திலும், 11 தொடக்கம் 12 வரை இரண்டாம் பக்கத்திலும், 13 - 20 வரையும் மூன்றாம் பக்கத்திலும், எஞ்சியதை நான்காம் பக்கத்திலும் வருமாறு தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன், தொடர்புடைய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினாலேயே தெளிவாக உள்ளடக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப் படிவங்களும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்களும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது விண்ணப்பதாரிக்கு பயனுடையதாகும். மேலும் விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துடன் ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுடன் ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைத்ததாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படமாட்டாது.

09. அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தரின் விண்ணப்பப்படிவங்கள் அவர்களின் நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முடிவின் கீழ், முறையாக பரீட்சைக் கட்டணம் செலுத்தி , குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைத்திருக்கும் விண்ணப்பதாரிகள் சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டவுடன், அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகை விளம்பரமொன்று வெளியிடப்படும். விளம்பரம் வெளியிடப்பட்ட இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அது பற்றி விளம்பரத்தில் குறிப்பிட்டவாறாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறவிக்கப்பட வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டதற்கான பற்றுச்சீட்டு, பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் வினவ வேண்டும். கொழும்பிற்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகள் அனுமதியட்டையின்

பிரதியொன்றை தொலைநகல் மூலம் பெற்றுக்கொள்வதற்காக மேற்குறிப்பிட்ட விபரங்களுடன் உங்கள் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, விபரங்கள் அடங்கிய கோரிக்கைக் கடிதம் ஒன்றை தெலைநகலூடாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்து அது பற்றி வினவுவது பயனுறுதிமிக்கது.

10.1 விண்ணப்பப் படிவத்திலும் அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். ஏதேனும் நிறுவனத்தை சேர்ந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரி அவரது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்த வேண்டும் என்பதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ஓய்வு பெற்ற அதிகாரி, உரிய பிரதேசத்தைச் சார்ந்த கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியபிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையைச் சேர்ந்த அதிகாரி, அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவை அல்லது நிரந்தர பதவியணி அதிகாரி, பௌத்த விகாரையின் தலைவர் அல்லது நாயக்க தேரர் அல்லது வேறு மத நிலையமொன்றின் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்தைச் சேர்ந்த ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

10.2 அபேட்சகரொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரமொன்று வழங்குதல் என்பது, அவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவி சம்பந்தமாக தகுதியைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கு அடையாளம் அல்ல.

11. பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இந்தத் தொகையை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13 என்ற வருமானத் தலைப்பின் கீழ் அரசாங்கத்தின் வருமானத்தில் வரவு வைக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் நிலையத்துக்கு பணம் செலுத்தி, விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கழறாதவாறு ஒட்ட வேண்டும். பரீட்சைக் கட்டணத்துக்கு மேலதிகமாக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன். பரீட்சைக் கட்டணம் தொடர்பில் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தினாலும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றப்படவோ முடியாது என்பதுடன் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தன்னிடம் வைத்திருப்பது பயனளிக்கும்.

12. பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அதுபோன்று பரீட்சார்த்திகள் தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவான வகையில் முகம் மற்றும் இரு காதுகள் மூடப்படாத வகையில் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதை ஆட்சேபிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க அனுமதி அளிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும்வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரிகளை அடையாளம் காண்பதற்கு ஏதுவான வகையில் முகம் மற்றும் காதுகள் மூடப்படாத வகையில் இருக்க வேண்டும்.

13. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை விநியோகித்தல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு விண்ணப்பதாரிகள் கீழ்ப்படிய வேண்டும். இவ் விதிகளுக்கு மாறாக செயற்படின், பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உள்ளாக நேரிடும்.

14. இந்த அறிவித்தலில் அடங்காத ஏதேனும் விடயம் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்பு அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளரை சாறும் என்பதுடன், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூல அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் அப்போது சிங்கள மொழிமூல அறிவித்தலுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எஸ். என். அகுரண்திலக,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும்
சேவைகள் பணிப்பாளர்,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும்
சேவைகள் திணைக்களம்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்,
மாஹேனவத்த, பிட்டிப்பன,
ஹோமாகம.
2020.09.15

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் இரசாயன ஆய்வுகூட உதவியாளர்கள் பதவிக்காக பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020**

**Open Competitive Examination for the Recruitment to the Trainee Grade of the Posts of Lab Assistant of the Sri Lanka Technological Service of Department of Measurement Units, Standards and Services - 2020**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

1. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :........................................................................

2. முதலெழுத்துக்கள் கடைசியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):
(உதாரணமாக : NIMAL, A.P.). ..........................................................................................................
..............................................................................................................................................

3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................................................

4. நிரந்தர முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) (அனுமதிப் பத்திரங்கள் இந்த முகவரிக்கே அனுப்பப்படும்.)
..............................................................................................................................................
..............................................................................................................................................

5. பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

7. கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. விவாகமானவரா/விவாகமாகாதவரா:
விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

9. இனம் : (சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

10. (அ) பிறந்த திகதி :-

ஆண்டு : மாதம்: திகதி:

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள்: மாதங்கள்: நாட்கள்:

11. நீங்கள் ஒரு இலங்கைப் பிரசையானது பதிவினாலா அல்லது பரம்பரையாகவா என்பதை குறிப்பிடவும். (பதிவின் மூலம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும்.)

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

12. கல்வி/தொழில் தகைமைகள் :

12.1 க.பொ.த. (சா. த.) பரீட்சை :

பரீட்சையில் சித்தியடைந்த வருடம் : ..........................................

பரீட்சை சுட்டெண் : .........................................

| | பாடங்கள் | கிடைக்கப்பெற்ற சித்தி |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |

12.2 க.பொ.த. (உ. த.) பரீட்சை :

பரீட்சையில் சித்தியடைந்த வருடம் : ...............................

பரீட்சை சுட்டெண் : ...............................................

| | பாடங்கள் | கிடைக்கப்பெற்ற சித்தி |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

12.3

| | | |
|---|---|---|
| நீங்கள் சித்திபெற்றுள்ள அதி உயர்ந்த பரீட்சை | | |
| சிங்களம் | | |
| தமிழ் | | |
| ஆங்கிலம் | | |

12.4 வேறு கல்வி/தொழில் தகைமைகள்

| பரீட்சை | நிறுவனம் | திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

13. தற்போதைய தொழில் மற்றும் முன்னர் ஏதேனும் பதவி வகித்திருப்பின் :

| பதவி | இருந்து | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

14. நீங்கள் ஓர் அரச துறையில் இருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளீர்களா ? (அவ்வாறெனில் விபரங்களைக் குறிப்பிடுக.)
..................................................................................................................

15. உங்களுக்கு எதிராக (தற்போது அரசாங்க சேவையில் இருப்பின்) திணைக்கள ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளதா?
..................................................................................................................

16. நீங்கள் ஏதேனும் குற்றச் செயலுக்கு நீதிமன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?
..................................................................................................................

17. உங்களைப் பற்றி விசாரித்து அறிந்து கொள்வதன் பொருட்டு உறவினரல்லாத இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைத் தருக.

1. ..........................................................
..........................................................
..........................................................
..........................................................

2. ..........................................................
..........................................................
..........................................................
..........................................................

18. இதனுடன் தொடர்புடைய வேறும் தகவல்கள் :
..................................................................................................................
..................................................................................................................

19. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம் : ..........................................................

பற்றுச்சீட்டு இலக்கம் : ..........................................................

திகதி : ......................................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும். |

20. விண்ணப்பதாரியின் உறுதியுரை:
இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ................ மற்றும் ................ ஆந் திகதியுடைய பண பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கும், இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைய நான் தகுதியற்றவராக காணப்பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது அது நடைபெறும் போது அல்லது அதற்குப் பின் எனது பரீட்சைக்கான உரிமையை இரத்துச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஏதேனும்

தீர்மானத்துக்கு நான் இணக்கம் தெரிவிக்கிறேன். மேலும், நான் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னரானாலும் இதில் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவல் பிழை அல்லது பொய்யானது என தெரியவரின், எந்தவொரு நட்டஈடுமின்றி நான் சேவையை விட்டு விலக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக்கொள்வதோடு, பரீட்சையை நடத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பணிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் பற்றிய தீர்மானங்களுக்கும் இணங்குவதாக ஒப்புக்கொள்கிறேன்.

........................ ................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

21. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி .................................................. அவர்களை தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியும் என்றும் அவர் ..................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதி செய்கின்றேன்.

...............................
அத்தாட்சிப்படுத்துகின்ற அலுவலரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

பெயர் :......................................
பதவி :......................................
முகவரி :......................................
திகதி :......................................

22. விண்ணப்பதாரி அரசாங்க ஊழியராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை எனவும்/ பின்வருமாறு திருத்தப்பட வேண்டுமெனவும், குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் அவரின் வேலையும் நடத்தையும் ..................... என நான் உறுதிப்படுத்துகிறேன். தற்போத வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

...............................
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.

பதவி :......................................
(பதவி முத்திரை மூலம் உறுதிசெய்தல் வேண்டும்)
திகதி :......................................

10-184

---

## சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியின் சட்ட அலுவலர் II ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை –2020

## Efficiency Bar Examination for Grade II Legal Officers in the Department of Legal Affairs - 2020

01. சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியைச் சேர்ந்த சட்ட அலுவலர்களுக்கான தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக சட்ட அலுவலர் பதவிக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. (i) இந்தப் பரீட்சையானது, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் நடாத்தப்படுகின்ற அதேவேளையில், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் நிர்ணயிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுகின்றனர். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இந்த சட்டங்களை மீறும் பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படுகின்ற தண்டனை ஒன்றுக்கு அவர்கள் உட்பட வேண்டியேற்படும்.

3. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கு உரிய பாடங்களுக்காக ஒரே தடவையிலோ அல்லது வெவ்வேறாகவோ தோற்ற முடியும். முழுமையான பரீட்சைக்கு அல்லது ஒரு பாடத்திற்கு முதற் தடவையாக தோற்றுகின்ற பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதற்குப் பின்னர் தோற்றுகின்ற எல்லா சந்தர்ப்பத்திலும் ரூபா 250.00 பரீட்சைக் கட்டண மொன்று அறவிடப்படுகின்றது. இந்தப் பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கக்கூடிய விதத்தில் நாட்டில் அமைந்துள்ள எந்த ஒரு தபால், உப தபால் அலுவலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமானது.) பரீட்சைக் கட்டணத்திற்கு காசுக் கட்டளை அல்லது முத்திரை என்பன ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதோடு செலுத்தப்பட்ட கட்டணம் எந்த ஒரு காரணத்தைக் கொண்டும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றப்படவோமாட்டாது.

4. **விண்ணப்பங்கள்**.- விண்ணப்பப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும். இந்த மாதிரிப் படிவத்திற்கு அமைவாக A4 அளவிலான தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தியதாக தயாரிக்கப்பட வேண்டிய அதேவேளையில், தலைப்பு இலக்கம் 01 முதல் 04 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலும் அமையக்கூடிய விதத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும் போது தலைப்பில் குறிப்பிடப்பட்டள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழியில் சமர்ப்பிக்கப்படுகிற விண்ணப்பப் படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் பயன்படுத்துவது அவசியமானதாகும். விண்ணப்பப் படிவத்தை தட்டச்சு செய்து தயாரிக்கக் கூடியதாக இருக்கின்ற போதிலும் அதனை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்தல் வேண்டும். அதற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரியினால் திணைக் களத் தலைவரின் மூலம் 2020.11.06 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சை) கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம் த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். முழுமையற்ற தகவலுடன் கூடிய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேலும் விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பத்துடன் இணங்கியதா என்பத பற்றி விண்ணப்பதாரர் சரிபார்க்க வேண்டிய அதே வேளையில், அவ்வாறில்லையெனில், விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமானது.)

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகள், ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தங்களது முகம் மற்றும் இரு காது களையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதே போன்று ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிப்படமாட்டாது. பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

6. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பார்கள் என்ற பூர்வாங்கத் தீர்மானத்தின்படி, விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையின் பிரதியொன்றுடன் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடனேயே அது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாக அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதில் விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட வேண்டிய அதேவேளையில், அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயாராக வைத்திருப்பது முக்கியமானதாகும். கொழும்புக்கு வெளியே வசிக்கும் விண்ணப்பதாரியாக இருப்பின், தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் நிழற்படப் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக உங்களுடைய தொலைநகல் இலக்கத்தையும் மேலே காட்டப்பட்டுள்ள விபரங்களையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் ஒன்றை தொலைநகல் இலக்கத்தின் ஊடாக பரீட்சை திணைக்களத்துக்கு அனுப்பி வினவுவது பயன்மிக்கதாகும்.

7. விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் திணைக்களத் தலைவரின் மூலம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் மூலம் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தியொருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றியிருக்க வேண்டிய அதேவேளையில், பரீட்சைத் தினத்தன்று தனது கையொப்பத்தை சான்றுப்படுத்தியுள்ள அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். இந்த அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

8. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விண்ணப்பதாரரின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்றுபுடையதாக இருக்கின்ற அதேவேளையில், விண்ணப்பப்படிவத்தை அனுப்பியதன் பின்னர் அது சம்பந்தமாக ஏற்படுகின்ற மாற்றங்கள் எதனைப் பற்றியும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

9. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையை வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கு தோற்றக் கூடிய விதத்தில் திணைக்களத்தின் தலைவரினால் கடமை லீவு வழங்குதல் வேண்டும். போக்குவரத்து கட்டணம் செலுத்தப்படமாட்டாது.

10. இந்தப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம்பெறும். பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு மொழி மூலமாக போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் அரசாங்க சேவையில் இணைந்துள்ள ஒருவராக இருந்தால் போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய மொழியும், போட்டி பரீட்சையின்றி அரசாங்க சேவைக்கு இணைந்துள்ள ஒருவராக இருப்பின், அரசாங்க சேவையில் இணைவதற்கு தகைமை பெற்ற பரீட்சைக்கு தோற்றியிருந்த மொழி, மொழி மூலம் என்ற வகையில் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சைக்கு உரிய சகல பாடங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் தோற்றியிருக்க வேண்டிய அதேவேளையில், விண்ணப்பித்திருந்த மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் இடம்பெறும்.

12. **பரீட்சை நடவடிக்கைமுறை**.- மேற்குறிப்பிட்ட பதவிக்குரிய பரீட்சை பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாகும்.

| வினாத்தாள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திபெறவேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| சட்டம் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

பாடவிதானம்

| வினாத்தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| சட்டம் | நிதி அமைச்சின் விடயப் பரப்பிற்கு உரித்தான சட்டங்கள்<br>I. இலங்கையின் சட்டத்தொகுதி<br>II. உடன்படிக்கைச் சட்டம்<br>III. முகவர் நிறுவனச் சட்டம் |

**குறிப்பு**.

* உரிய காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைய முடியாமற் போகின்றமை, அதன் பின்னர் ஏற்படுகின்ற சம்பள ஏற்றங்கள் தாமதமடைவதற்கு காரணமாக அமையலாம்.

13. பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டதைக் கொண்டு, அவர் பரீட்சைக்குத் தோற்று வதற்குத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதுதல் கூடாது.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படாத எந்தவொரு விடயம் பற்றியதாயினும் சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

15. இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படுமாயின் சிங்கள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வலுவிலிருக்கும்.

பணிப்பாளர் நாயகம்,
சட்ட அலுவல்கள் திணைக்களம்.

சட்ட அலுவல்கள் திணைக்களம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியின் சட்ட அலுவலர் II ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020**

Efficiency Bar Examination for Grade II Legal Officers in the Department of Legal Affairs - 2020

(அலுவலக உபயோகத்துக்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):……………………………….....................................
உதாரணம் (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வருகின்ற பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னாலும் பயன்படுத்தி பெயர்: (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ………………………………………………………….........
(உதாரணம் GUNAWARDANA H.M.S.K)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ………………………………………………………………
………………………………………………………………

2. 2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்)

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : …………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………...

2.3 சொந்த முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :…………………………………………………………….....................
…………………………………………………………………......

2.4 செல்லிடத் தொலைபேசி இல.:

3. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

4. ஆணா/ பெண் :

4.1 ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுங்கள்)

5. பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

6. தற்போது வகிக்கும் பதவி
6.1 பதவி :………………………………..
6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :…………………………………………

7. 7.1 நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவையா? :........................................
7.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவையல்ல எனில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :........................................
7.3 பற்றுச்சீட்டு இலக்கம் :........................................
7.4 திகதி:..................

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மாத்திரம்).(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தன்வசம் வைத்திருப்பது பயனுடையதாகும்.) |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிமை உடையவர் ஆவேன் எனவும் பரீட்சைக் கட்டணம் ரூபா .............. செலுத்தி பெற்றுக்கொளள்ப்பட்ட பற்றுச்சீட்டு இங்கே ஒட்டப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாகவும் பெறுபேறுகளை வெளியிடுவது சம்பந்தமாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் உடன்படுகின்றேன் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

......................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி:............

தமது திணைக்களத்தின் தலைவர் அல்லது அந்த திணைக்களத்தின் தலைவரின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரின் முன்னிலையில் விண்ணப்பதாரரினால் கையொப்பம் இடப்படுதல் வேண்டும்.

கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் :
எனது திணைக்களத்தின் அலுவலரும் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறியக்கூடியவருமாகிய திரு. ................................ ....... அவர்கள் ......................... ஆந் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் சான்றுப்படுத்துகிறேன்.

..............................,
கையொப்பத்தை சான்றுப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்

பெயர் :........................................
பதவிப்பெயர் :.................................
முகவரி:..........................................
திகதி:...........................................
(பதவி முத்திரையின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

திணைக்களத் தலைவரின் சான்றுரை :

1. மேலே தரப்பட்டுள்ள விபரங்களை பரிசீலனை செய்து பார்த்தேன் எனவும்.
2. அலுவலர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையானவர் எனவும்,

சான்றுப்படுத்துகிறேன்.

..............................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :........................................
பதவிப்பெயர் :.................................
முகவரி:..........................................
திகதி:...........................................

திருத்தம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

*முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு 3 ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை -2019 (2020)*

*2195 ஆம் இலக்க 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் படி இலக்கம் 9-821 இன் கீழ் வெளியிடப்பட்ட "இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பப் பிரிவு 3 ஆம் வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை 2019 (2020)" அறிவித்தலின் 2 ஆவது பந்தியில் III இல் தொழிற் தகைமையின் கீழ் (இ) பகுதியானது கீழே தரப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது:-*

III. *தொழில் தகைமைகள்*

*இ. அச்சுப்பதிப்பு முன் திட்டமிடுபவர் பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுள் கமராவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட படங்களை அச்சுத்தகடுகளில் பிரதியீடு செய்தல், அச்செடுக்கப்பட்ட அச்சுத் தகடுகளை மேலும் விருத்தி செய்தல் (Develop), கைப்பிரதி அல்லது அச்சுப்பிரதியை அச்சிடுவதற்காக அச்சு எழுத்துக்களை இணைத்தல்(நிறங்களைத் தீர்மானித்தல்) மற்றும் செயல் முறைக் கமராவினை செயற்படுத்துதல் தொடர்பான திறமையைக் காட்டும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

பீ. சனத் பூஜித,<br>
பரீட்சை ஆணையாளர் நாயகம்,<br>
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.

*10-556*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்ராரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2020**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 02.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2020 |
| | | வெள்ளி | 09.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2020 |
| | | வெள்ளி | 16.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2020 |
| | | வெள்ளி | 23.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2020 |
| | | வியாழன் | 29.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2020 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 06.11.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.10.2020 |
| | | வெள்ளி | 13.11.2020 | .. | நண்பகல் 12 | வியாழன் | 29.10.2020 |
| | | வெள்ளி | 20.11.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.11.2020 |
| | | வெள்ளி | 27.11.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.11.2020 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 04.12.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.11.2020 |
| | | வெள்ளி | 11.12.2020 | .. | நண்பகல் 12 | வியாழன் | 27.11.2020 |
| | | வெள்ளி | 18.12.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.12.2020 |
| | | வியாழன் | 24.12.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.12.2020 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.